# AISGEF 16ஆம் தேசிய மாநாடு
# சிறப்பு நிகழ்வுகள்




## எல்லா புகழும் தோழமைக்கே!

# எல்லா புகழும் தோழமைக்கே...

**உடம்பில் கொஞ்சம் எடை ஏறுன மாதிரி இருக்கு.**

**தோளில் கொஞ்சம்திணவு கூடின மாதிரி தோணுது.**

**புத்தியில் முன்னைவிட தெளிவு வந்துட்ட மாதிரி தெரியுது.**

**மனசுல இருந்த கொஞ்சநஞ்ச பயமும் காணாம போயிட்ட மாதிரி இருக்கு.**

இதெல்லாம் அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் பதினாறாம் தேசிய மாநாடு சென்னையில் வெற்றிகரமாக நடந்து முடிந்த பின்னர் நமக்கு ஏற்பட்டுள்ள சுகானுபவங்கள்.

மாநாட்டை நடத்திய நமக்கு மட்டுமல்ல, மாநாட்டில் பல்வேறு மாநிலங்களிலிருந்து வந்து கலந்துகிட்ட பிரதிநிதிகள், சங்க நிர்வாகிகள், பார்வையாளர்கள், சிறப்பு விருந்தினர்கள் என எல்லோருக்கும் இந்த உணர்வு ஏற்பட்டது என்பது அனைவரின் பேச்சிலும், முகத்திலும் தெரிந்தது.

இப்போது தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மீதான பார்வை அகில இந்திய அளவில் ஆச்சரியக்குறியாக மாறியுள்ளது. ஒரு சர்வதேச மாநாட்டுக்கு நிகராக நாம் இந்த மாநாட்டை நடத்தியிருக்கிறோம் என்று வந்தவர்கள் வாழ்த்திச் செல்லும் அளவுக்கு மாநாட்டின் ஒவ்வொரு நிகழ்வும் செதுக்கப்பட்டிருந்தது என்ற வாழ்த்துரைதான் விமர்சனமாக இருந்தது.

இந்த அகில இந்திய மாநாடு இவ்வளவு சிறப்பாக எந்தவித குழப்பமும் இல்லாமல் திட்டமிட்டபடி நடந்திருக்கிறது என்றால் அதற்கு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் மட்டுமே காரணமல்ல. கழிவறையை சுத்தம் செய்த தோழர் முதல் கருத்தரங்கில் பேசிய தோழர் வரை இந்த மாநாடு சிறப்பாக நடக்க வேண்டும் என்று ஒவ்வொருவரும் தங்கள் மனதில் இருத்தியிருந்த நேர்மறை எண்ணங்கள்தான் இந்த மாநாட்டை ஊர் போற்றும் மாநாடாக இல்லாமல் பார் போற்றும் மாநாடாக மாற்றியிருக்கிறது.

எல்லா சாலைகளும் ரோம் நகரை நோக்கியே... என்ற சொலவடை ஏப்ரல் 4ம் தேதி முதல் 8ம் தேதி வரை எல்லா சாலைகளும் மாதவரம் ராம் லட்சுமி மஹாலை நோக்கியே...என்கிற அளவுக்கு தோழமைச் சங்க நிர்வாகிகள்,பத்திரிகையாளர்கள், பார்வையாளர்கள், ஊடகவியலாளர்கள் என பலதரப்பினரும் ஆர்வத்துடன் மாநாட்டுக்கு வந்து ஆச்சர்யத்துடன் நிகழ்வுகளைக் கண்டனர்.

தனிப்பட்ட முறையில் ஒவ்வொருவருடைய பங்களிப்பை பட்டியலிட வேண்டும் என்றால் கண்டிப்பாக இந்த இதழின் பக்கங்கள் போதாது. பெயர் தெரிந்தவர்கள் மட்டுமல்ல பெயர் தெரியாத பலபேரும் கூட இந்த மாநாட்டுக்கு தங்கள் பங்களிப்பை செய்திருக்கிறார்கள். “எல்லோருக்கும் நன்றி” என்ற இரு வார்த்தைகள் வெறும் சம்பிரதாயமாகவே இருக்கும். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் அவர்கள் அனைவருக்கும் நன்றிக் கடன் பட்டிருக்கிறது.

மாநாட்டு அரங்கின் முகப்பு முதல் மாநாட்டு மேடை வரை அலங்காரங்கள், பதாகைகள், கண்காட்சி, கலைநிகழ்ச்சிகள் என திரும்பிய இடமெல்லாம் தோழர்களின் திறமைகள் திக்குமுக்காட வைத்தன.

செவிக்கு உணவில்லாதபோது வயிற்றுக்கா? அல்லது வயிற்றுக்கு உணவில்லாத போது செவிக்கா? என்று பட்டிமன்றம் நடத்தும் அளவுக்கு கருத்துக்கூடமும் உணவுக்கூடமும் தங்கள் பங்களிப்பை போட்டி போட்டு செய்தன என்றால் மிகையாகாது.

உணவுக்காக, சிற்றுண்டிக்காக, தேநீருக்காக, பல இயக்கங்களும் சில தனிப்பட்ட நபர்களும் நிதிஉதவி செய்து நம்மை நெகிழ வைத்துவிட்டனர். அதேபோல் மாநாட்டு செலவுகளுக்காக மாநாட்டு மலருக்கு விளம்பரங்கள் கொடுத்து பலபேர் உதவி செய்தனர். தோழமைச் சங்கங்கள் நிதியளிப்பு செய்தும் தோழர்கள் பலபேரும் தனிப்பட்ட முறையில் தங்களால் இயன்ற பொருளுதவிகள் செய்தும் இந்த மாநாட்டை நாம் எதிர்பார்த்ததை விட பிரம்மாண்டமாக்கி காட்டிவிட்டனர்.

வீட்டைக் கட்டிப்பார், கல்யாணம் பண்ணிப்பார் என்ற பழமொழிக்கு பின்புறம் மாநாட்டை நடத்திப்பார் என்பதையும் சேர்க்கக்கூடிய அளவுக்கு வீடு கட்டுவதைவிட கல்யாணம் செய்வதை விட எல்லோரும் ஒன்றுகூடி நடத்திய மாநாடு ஏற்றுக்கொண்ட சவாலாக இருந்தாலும் முன்னிரண்டிலும் இல்லாத மனநிறைவை, மனவலிவை இது தந்துள்ளது.

ஆக, இந்த மாநாட்டில் ஒவ்வொருவருடைய பங்களிப்பையும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் போற்ற, பாராட்ட, வாழ்த்த, நன்றி கூற கடமைப்பட்டிருக்கிறது. இந்த மாநாடு பிரம்மாண்டமானதொரு மாநாடாக மாற்றிய தோழமைச் சொந்தங்கள் அனைவருக்கும் புரட்சிகர வாழ்த்துக்கள். எல்லா புகழும் தோழமைக்கே!

**அரசு ஊழியர்**

ஏப்ரல் 2018

மலர் : 39 இதழ் : 4

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்காக
அச்சிட்டு வெளியிடுபவர் : மு.அன்பரசு

ஆசிரியர் : மு.சுப்பிரமணியன்

ஆசிரியர் குழு

மு.அன்பரசு, எம்.தங்கராஜ், ந.குமாரவேல்,
மொ.ஞானத்தம்பி, இரா.பன்னீர்செல்வம்,
எஸ்.தமிழ்ச்செல்வி, என்.ஜனார்த்தனன், தி.கலைசெல்வி

முகவரி : பழைய எண். 48
புதிய எண் 46, தேரடித் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.
e-mail : arasuoozhiyar@gmail.com

*அச்சகம்: சென்னை ஆப்செட் பிரிண்டர்ஸ்,*
*19/1 & 21/2, கிட்டாபாத் கான் பகதூர் தெரு,*
*எல்லீஸ் ரோடு, அண்ணாசாலை, சென்னை - 600 002.*

*ஆண்டுச் சந்தா : ரூ. 80 தனி இதழ் ரூ. 8*

**சூடாக ஒரு கோப்பை சூப்**

### சுகமான சுமை

மனித குலத்தின்
நன்மைக்காக
சிறப்பாகப்
பாடுபடுவதற்கான
வேலையை நாம்
தேர்ந்தெடுத்துவிட்டால்
அதன் சுமை நம்மை
அழுத்தமுடியாது
ஏனென்றால்
அது எல்லோருடைய
நன்மைக்காக
செய்யப்படுகின்ற தியாகம்!

- காரல் மார்க்ஸ்

# மாநாடுகள் போற்றும் அகில இந்திய மாநாடு!

உழைப்பாளி மக்களின் ஒவ்வொரு அமைப்பும் நடத்தும் மாநாடுகள் அனைத்தும் ஒரு வரலாறு தான். அந்த வகையில் அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் 16வது தேசிய மாநாடு சென்னையில் நடந்தேறியதும் ஒரு வரலாற்று நிகழ்வுதான்.

இன்றைய அரசியல் சூழ்நிலையில் அகில இந்திய மாநாட்டை தமிழ்நாட்டில் நடத்துவது தான் சிறப்பாக இருக்கும் என்ற பெரும் நம்பிக்கை யுடன் தேசியக் குழு முடிவு செய்து நம்மிடம் ஒப்படைத்தது. அந்த நம்பிக்கைக்கு உத்திரவாதம் அளிக்கும் வகையில் ஏப்ரல் 5 முதல் 8 வரை பிரமிப்பூட்டும் வகையில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் ஒரு சவாலாக ஏற்று நடத்திக் காட்டியது.

ஜாதி, இனம், மொழி இவற்றைக் கடந்து இந்தியா முழுவதிலுமிருந்தும் 24 மாநிலங்களைச் சேர்ந்த அரசு ஊழியர்கள் ஏப்ரல் 5 முதல் 8 வரை பிரதிநிதிகளாகவும், பார்வையாளர்களாகவும் கலந்து கொண்டு, அரசு ஊழியர்கள் சந்திக்கும் கடுமையான பிரச்சனைகளை அலசி ஆராய்ந்து அரசு ஊழியர்களின் எதிர்காலம் குறித்து தீர்மானங்களாக வடித்தெடுத்துள்ளனர் என்றால் அது மிகையல்ல. நான்கு நாட்களும் தொழிலாளர் அமைப்புகளைச் சேர்ந்த சங்கத் தலைவர்கள் நம்மோடு இணைந்து ஒன்றுபட்டு குரல் கொடுத் தனர். மாநிலங்களவை உறுப்பினர் தோழர் டி.கே.ரங்கராஜன் வரவேற்புக் குழுத் தலைவராக இருந்து மாநாட்டினை வெற்றிகரமாக நடத்திட வழிகாட்டினார்.

இந்திய தொழிற்சங்க மையத்தின் அகில இந்திய துணைத் தலைவர் தோழர் ஏ.கே.பத்மநாபன் மாநாட்டினை துவக்கி வைத்து இந்திய தொழிலாளர்கள் சந்திக்கும் சவால் களையும், எதிர்கொள்ள ஒன்றுபட்ட போராட்டத் தின் அவசியத்தையும் உணர்த்தினார். தொடர்ச்சி யாக பேராசிரியர் சந்திரா அவர்கள், இந்திய நாடு சந்தித்து வரும் அவலங்களையும், மத்திய அரசின் மதவாத போக்கினையும் விளாசித் தள்ளினார். எல்.ஐ.சி.யின் தோழர் கிரிஜா அவர்கள், பெண்கள்

[தொடர்ச்சி 8ஆம் பக்கம்]

மாநாட்டின் முதல் நிகழ்வு - நினைவு ஜோதிகளை பெறுதல்



கன்னியாகுமரி மாவட்டத்தில் இருந்து கொண்டு வரப்பட்ட தோழர் சுகுமால்சென் நினைவு ஜோதியை சிஐடியு அகில இந்திய துணைத் தலைவர் ஏ.கே.பத்மநாபன் பெற்றுக் கொள்கிறார்.



நாகப்பட்டினத்தில் இருந்து கொண்டு வரப்பட்ட எம்.ஆர்.அப்பன் நினைவு ஜோதியை மாநிலங்களவை உறுப்பினர் டி.கே.ரங்கராஜன் பெற்றுக் கொள்கிறார்.



நீலகிரி மாவட்டத்தில் இருந்து கொண்டு வரப்பட்ட ஆர்.முத்துசுந்தரம் நினைவு ஜோதியை அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளன பொதுச் செயலாளர் ஏ.ஸ்ரீகுமார் பெற்றுக் கொள்கிறார்.



சங்கக் கொடியேற்றம்




தியாகிகளுக்கு அஞ்சலி




“அரசு ஊழியர்கள் தங்கள் உரிமைகளுக்காக ஒன்றுபடுவது மட்டுமல்லாமல் கல்வி உரிமை, பொதுத்துறை பாதுகாப்பு, விவசாயிகளின் தேவை, பாலின சமத்துவம் முதலியவற்றுக்காக போராடுபவர்களுடனும் ஒன்றிணைந்து போராட வேண்டும்”.

– டி.கே.ரங்கராஜன், வரவேற்புக் குழுத் தலைவர்

[5ஆம் பக்கத் தொடர்ச்சி...]

சந்திக்கும் பிரச்சனைகளையும், அதற்கு எதிராக திரள வேண்டிய அவசியத்தையும் எடுத்துக் கூறினார்.

பேராசிரியர் வெங்கடேஷ் பி.ஆத்ரேயா, இந்திய பொருளாதாரம் சந்திக்கும் பேராபத்து களையும், இந்திய அரசின் கொள்கைகளையும் படம் பிடித்துக் காட்டினார். மாநாட்டின் முத்தாய்ப்பாக மகாத்மா காந்தியின் பேரனும், மேற்குவங்க முன்னாள் ஆளுநருமான கோபால கிருஷ்ண காந்தி அவர்கள் மதச்சார்பின்மையுன் முக்கியத்துவத்தையும், ஒற்றுமையையும் வலி யுறுத்தி பேசினார். இடையிடையே கலைக் குழுக்கள் தங்களின் திறமையால் பிரதிநிதிகளை அறிவுப்பூர்வமாக உற்சாகப்படுத்தினர்.

மாநாட்டில் இன்றைய வேலையின்மை, இளைஞர்களின் எதிர்காலம், புதிய பென்ஷன் திட்டம் ரத்து, அவுட் சோர்சிங் முறை ரத்து, காலிப் பணியிடங்களை ரத்து செய்வது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. பிரதிநிதிகள் மாநாட்டின் நிறைவாக புதிய நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர்.

ஏப்ரல் 8ஆம்தேதி எழுச்சியுடன் கூடிய சிவப்பு நிற உடையணிந்த தொண்டர்களின் பேரணி நடைபெற்றது. அன்றைய தினம் சென்னை சேப்பாக்கத்தில் பொது மாநாடு நடைபெற்றது. மாநாட்டில் மாண்புமிகு கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் அவர்கள் கலந்து கொண்டு தற்போதைய மத்திய அரசின் கொள்கைகளையும், அதனால் தொழிலாளர்களுக்கு ஏற்பட்ட தாக்குதல்களையும், பணி ஓய்வுக்கு பின் ஊழியர் கள் பெறக்கூடிய பென்ஷன் எந்த அளவுக்கு முக்கியம் என்பதையும், அவற்றை பெறுவதற்கு ஒன்றுபட்ட போராட்டமே தீர்வு என தனது உரையில் தெரிவித்தார். ஓய்வு பெற்ற சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி அரிபரந்தாமன் கலந்து கொண்டு ஜாக்டோ-ஜியோ போராட் டத்தை பெருமைப்படுத்தியும், தொடர்ந்து ஜாக்டோ-ஜியோ போராட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

பிரதிநிதிகள் மாநாட்டையும், பொது மாநாட் டையும் மிக சக்தியாக நடத்தியது வரவேற்புக் குழுவும், தொண்டர் படையில் இடம் பெற்றிருந்த இளைஞர்களும் என்றால் அது மிகையல்ல. இந்த இளைஞர்கள் மாநாட்டில் கலந்து கொண்டு பணியாற்றியதும், அவர்களை உணர்வுபூர்வமாக இயக்கத்தில் இணைத்ததும் மிகப்பெரிய வெற்றியாகும்.

மாநாடு நடைபெற மூன்று மாதங்களாக அர்ப்பணிப்புடன் உழைத்த மாநில, மாவட்ட, வட்டக்கிளை நிர்வாகிகள், முன்னணித் தோழர்கள், வரவேற்புக் குழுவில் இடம் பெற்ற தோழர்கள், துறைவாரிச் சங்க தலைவர்கள், தோழமைச் சங்கத் தலைவர்கள், மிக முக்கியமாக தொண்டர் படைத் தோழர்கள் ஆகியோரை நெஞ்சார பாராட்டுகிறோம்.

ஒட்டுமொத்தத்தில், இன்றைய அரசியல் சூழ்நிலையில் தமிழ்நாட்டில் அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் தேசிய மாநாடு நடைபெற்றது மத்திய-மாநில அரசுகளின் கொள்கைகளுக்கு வேட்டு வைக்கும் சரித்திர நிகழ்வினை உருவாக்கும் என்பதில் யாருக்கும் ஐயமில்லை. நடந்தேறிய மாநாடு மத்திய-மாநில அரசுகளுக்கு ஒரு எச்சரிக்கை மணியாக ஒலித் திருக்கும். ஆம்... நாம் நடத்தும் அமைப்பு களின் ஒவ்வொரு மாநாடும் சிறப்புதான். அதிலும் இந்த மாநாடு "மாநாடுகள் போற்றும் மாநாடாக" இருக்கும்.

இந்தப் பணியுடன் நமது அடுத்தகட்ட நடவடிக்கைகளை உற்சாகமாக தொடருவோம். வட்ட, மாவட்டப் பேரவைகளை திட்டமிட்டு நடத்தி ஸ்தாபனத்தை மேலும் உற்சாகமாக எடுத்துச் செல்வோம். ஏப்ரல் 8 மாநாடு உணர்த் தியது போல், நமது உரிமைகளை மீட்டெடுக்க ஜாக்டோ-ஜியோவின் சார்பில் சென்னையை முற்றுகையிட மே 8-ல் கோபத்தின் மொத்த உருவமாக கூடுவோம். ❖



**தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் முன்னாள் மாநில துணைத் தலைவரும், தமிழ்நாடு கல்வித்துறை நிர்வாக அலுவலர் சங்கத்தின் ஸ்தாபக தலைவர்களில் ஒருவருமான தோழர் எம்.ஆர்.அப்பன் கடந்த 31.3.2018 அன்று பணி ஓய்வு பெற்றார். பணி ஓய்வு காலத்திலும் அவருடைய சமூகப் பணி தொடர, தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் தனது நெஞ்சார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது.**

### அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளன 16ஆம் தேசிய மாநாடு

# புதிய களங்களைக் காண வழி வகுத்தது . . !

# போராளிகளை பட்டை தீட்டியது. . ! !

## விருப்பத்தோடு ஏற்றுக்கொண்ட பெரும் பொறுப்பு



அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் பதினாறாவது அகில இந்திய மாநாடு இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் 5 முதல் 8 வரை சென்னையில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டு அதனை சிறப்பாக நடத்துவதற்கான அனைத்து பணிகளையும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் முனைப்பாக மேற்கொண்டது. அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் (AISGEF) தலைவராக இருந்த, அரசு ஊழியர் இயக்கத்தின் இரண்டாவது ஆசானாக விளங்கிய, காலஞ்சென்ற அருமைத் தோழரும், குமரி முதல் இமயம் வரை அரசு அலுவலகங்களில், பொதுத் துறைகளில், அமைப்புசாரா பணிகளில் பணிபுரியும் அனைத்துத் தரப்பு தொழிலாளர் வர்க்கத்தினராலும் ஆர்.எம்.எஸ். என்று அன்புடன் அழைக்கப்பட்ட தோழர் இரா.முத்து சுந்தரம் அவர்கள் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே சென்னையில் அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் மாநாட்டை நடத்திட வேண்டும் என எண்ணம் கொண்டிருந்தார். ஆனால் தோழரின் உடல்நிலை காரணமாக அந்த எண்ணம் செயல்பாட்டிற்கு வரவில்லை. அவர் மறைவுக்குப் பின்னர் அவர் விரும்பிய நிகழ்வை நடத்திக் காட்டி அவருக்கு மரியாதை செய்வதே அவருக்கு செலுத்தும் உண்மையான அஞ்சலியாக இருக்கும் என்று அரசு ஊழியர் சங்கம் அகில இந்திய அளவிலான மாநாட்டை நடத்திக் காட்டும் மாபெரும் பொறுப்புக்கு தன்னைத்தானே உட்படுத்திக் கொண்டது.

## அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் தோற்றம்

தமிழ்நாட்டில் உள்ள அரசு ஊழியர்களின் உரிமைகளுக்காக தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் செயல்படுவதுபோல், ஒவ்வொரு மாநிலத்திலும் இருக்கும் அரசு ஊழியர் சங்கங்கள் ஒன்றிணைந்து இந்தியா முழுமைக்குமான அரசு ஊழியர்களுக்கான ஒரு அமைப்பாக அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனம் இயங்கி வருகிறது. இது உருவான வரலாற்றுக்குப் பின்னே இந்தியா முழுவதிலும் அரசு அலுவலகங்களில் பணி புரிந்த அரசு ஊழியர்களின் கண்ணீரும், வியர்வையும், அவர்கள் பட்ட அவமானங்களும், கஷ்டங்களும், உழன்ற அடிமைத்தனங்களும் இருந்தன என்பதை இன்றைய அரசு ஊழியர் சமுதாயம் அறிந்து வைத்துக்கொள்ள வேண்டியது அவசியமானதாகும்.

இந்தியா சுதந்திரம் பெற்ற பிறகு பிரிட்டிஷ் அரசில் நியமிக்கப்பட்ட குமாஸ்தாக்களும்/ அதிகாரிகளும் அரசு ஊழியர்களாக மாற்றப்பட்ட போதிலும் அவர்கள் ஏற்கெனவே பிரிட்டிஷ் அரசாங்கத்தில், பிரிட்டிஷ் காலனி ஆதிக்கத்தின் இயந்திரங்களாக கருதப்பட்டு அடிமைகளாக நடத்தப்பட்ட போக்கு இந்தியா சுதந்திரமடைந்த பிறகும் மாறவில்லை. பிரிட்டிஷ் அரசாங்கம் அதன் குமாஸ்தாக்கள் மீது விதித்திருந்த கட்டுப்பாடுகள், தடை உத்தரவுகள், எழுத்துரிமை மறுப்பு, பேச்சுரிமை மறுப்பு போன்றவைகளை சுதந்திரத்திற்குப் பிறகு இந்தியாவை வழிநடத்திய அரசுகளும் தொடர்ந்து மேற்கொண்டன.

சுதந்திர இந்தியாவின் ஆட்சியாளர்களும் பிரிட்டிஷ் ஆட்சியாளர்களின் எதேச்சதிகார கோட்பாடுகளை விட்டொழிக்காமல் அதை அரசு ஊழியர்கள் மீது செலுத்தி அவர்களை அடிமைகளாகவே வைத்திருக்க வேண்டும் என்று எண்ணினார்கள். அதனால் அரசு ஊழியர்களின் உரிமைகளிலும் ஊதியங்களிலும் கட்டுப்பாடுகளையும், வெட்டுப்பாடுகளையும் விதித்தார்கள். பிரிட்டிஷ் கால ஆட்சியில் அரசு ஊழியர்கள் நடத்தப்பட்டதை விட சுதந்திர இந்தியாவில் அரசு ஊழியர்கள் மோசமாக நடத்தப்படும் போக்கு உருவானது. அரசியல் களத்தில் அரசு ஊழியர்களை நுழைய விட்டால் அது ஆள்பவர்களுக்கு ஆபத்தாக முடிந்துவிடும் என்பதில் கவனமாக இருந்த இந்திய அரசியல்வாதிகள்,






"பொதுமக்களிடமிருந்து தொழிலாளர்களை அந்நியப்படுத்தும் புதியதந்திரங்களை முறியடிக்க, சமுதாயத்திற்காகவும் போராடுகிற ஒன்றுபட்ட இயக்கங்கள் வலுவாக நடைபெறவேண்டும்."

– ஏ.கே.பத்மநாபன், அகில இந்திய துணைத் தலைவர், சிஐடியு

"பொருளாதார வளர்ச்சி என்ற பெயரில் நாட்டின் தன்னாளுமை விட்டுக் கொடுக்கப்படுகிறது. தொழிலாளர், ஊழியர் நலன்களும், உரிமைகளும் காவு கொடுக்கப்படுகின்றன."

– கே.கே.என்.குட்டி,
அகில இந்தியத் தலைவர்,
மத்திய அரசு ஊழியர் மகா சம்மேளனம்





"பல்லாயிரக்கணக்கான மக்களோடு தினமும் உரையாடுகிற வாய்ப்பு பெற்றவர்கள் அரசு ஊழியர்கள். அதை பயன்படுத்தக் கொண்டு மாற்றங்கள் குறித்த சிந்தனையை மக்களிடம் கொண்டு செல்ல வேண்டும்."

– சி!ஜெ.நந்தகுமார்,
அகில இந்திய செயலாளர், இந்திய வங்கி ஊழியர் சம்மேளனம்.



"வளர்ந்த முதலாளித்துவ நாடுகளில் கூட பள்ளிக்கல்வி இன்னமும் அரசாங்கத்தின் முழுப் பொறுப்பிலேயே இருக்கிறது. இந்தியாவில் திட்ட முறையில் கல்வி வெறும் வணிகச் சரக்காக மாற்றப்பட்டு விட்டது."

– கே.ராஜேந்திரன், இந்திய மாநிலப் பள்ளி ஆசிரியர் சங்கம் (STFI)




"ரயில்வே, பொதுத்துறை வங்கிகள் மற்றும் பல்வேறு அரசுப் பணிகள் தனியார்மயமாக்கப்படும் அச்சுறுத்தலான நிலைமையை உருவாக்கியிருக்கிறது நான்காண்டு கால பாஜக ஆட்சி."

– நெ.இல.சீதரன், தமிழ்நாடு அனைத்துத் துறை ஓய்வூதியர் சங்கம்



துவக்க நிகழ்ச்சியில் நன்றியுரையாற்றும் தேசிய செயற்குழு உறுப்பினர் தி.கலைச்செல்வி

இந்திய அரசு ஊழியர்களுக்கு 'அரசு ஊழியர் நடத்தை விதிகள்' என்ற மூக்கணாங்கயிறை மாட்டினார்கள். இதன்மூலம் அரசு ஊழியர்களும் அவர்தம் குடும்பத்தினரும் நேரடியாகவோ, மறைமுகமாகவோ அரசியல் கட்சி சார்புடன் இருக்கக் கூடாது என அச்சுறுத்தி அரசு ஊழியர்களை அரசியலிலிருந்து ஒதுக்கி வைக்க முயற்சித்தார்கள். இதனால் அரசு ஊழியர்கள் அரசாங்கத்திற்கு அடிமைகளாகவே சேவகம் செய்யும் நிலை எழுந்தது. இத்தகைய சூழ்நிலையில், ஆட்சியாளர்களின் அடிமைத்தளையிலிருந்து விடுபடவும், அடக்குமுறைகளை எதிர்க்கவும், இருக்கும் உரிமைகளைக் காக்கவும், புதிய உரிமைகளைக் கேட்கவும், இந்தியா முழுமைக்குமான ஒரு அமைப்பு மாநில அரசு ஊழியர்களுக்காக ஏற்படுத்தப்பட வேண்டியதன் அவசியம் உணரப்பட்டது. இந்தக் கருத்து மெல்ல மெல்ல வலுப்பெற்று, அது சுதந்திர இந்தியாவின் பதிமூன்றாண்டு கால அரசியல் மற்றும் பொருளாதார சூழ்நிலையின் பின்னணியில் 1960ஆம் ஆண்டு ஜனவரியில் அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனமாக உருப்பெற்றது.

## அரசு ஊழியர்களின் பாதுகாவலன்

கடந்த 58 ஆண்டுகளாக இந்தியாவில் அரசு அலுவலகங்களில் பணியாற்றிய மற்றும் பணியாற்றும் அரசு ஊழியர்களின் உரிமைகளுக்காக மட்டுமில்லாமல் பிற துறை சார்ந்த தொழிலாளர்கள், விவசாயிகள், நெசவாளர்கள், கட்டுமான ஊழியர்கள் போன்ற பலதரப்பட்ட உழைக்கும் வர்க்கத்தினரின் உரிமைக்காகவும் அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனம் குரல் கொடுத்து வருவதன் மூலம் இந்தியாவில் உள்ள மிகப்பெரிய தொழிற்சங்கங்களுக்கு இணையாக இன்று உயர்ந்து நிற்கிறது. தமிழகத்தில் அரசுத் துறைகளில் உள்ள 60க்கும் மேற்பட்ட சங்கங்களை உள்ளடக்கிய தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் ஆதரவுடன், இந்தியா முழுவதிலுமிருந்து சுமார் 60 லட்சம் ஊழியர்களின் பிரதிநிதித்துவம் கொண்ட அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனம் தமிழ்நாட்டில் ஒரு தேசிய மாநாட்டை நடத்துகிறது என்றால் அது எத்தகையதொரு வரலாற்றுச் சிறப்பு மிக்க நிகழ்வாக இருக்கும் என்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

இந்தியா முழுவதிலும் உள்ள அரசு ஊழியர்களின் உரிமைகளைப் பாதுகாப்பது, பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பது, பொருளாதார மேம்பாட்டிற்காக உழைப்பது, சமூகப் பாதுகாப்பிற்காக பாடுபடுவது மற்றும் சுரண்டலற்ற சமுதாயத்தை உருவாக்க போராடுவது போன்ற உயரிய நோக்கங்களுக்காக உருவாக்கப்பட்ட இச்சம்மேளனம் கடந்த 58 ஆண்டுகளாக அந்த நோக்கங்களுக்காக போராடி வருகிறது.

## அரசு ஊழியர்கள் மற்றும் தொழிலாளர்களின் உரிமைகளுக்காக சமரசமற்ற சமர் புரியும் சம்மேளனம்

1990ஆம் ஆண்டு முதல் மத்திய அரசு பின்பற்றி வரும் புதிய பொருளாதாரக் கொள்கைகளின் விளைவாக தொழிலாளர்கள், விவசாயிகள், அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், ஏழை மற்றும் நடுத்தர மக்கள் மிகுந்த பாதிப்புகளுக்கு ஆளாகி வருகின்றனர். ஆனால் பெருநிறுவன முதலாளிகளோ இந்த புதிய பொருளாதாரக் கொள்கை மூலம் கொழுத்து வருகிறார்கள். அரசாங்கங்களும் உள்நாட்டு வெளிநாட்டு பெருநிறுவனங்களின் நலன்களுக்கு ஆதரவாக செயல்படுகின்றனவே தவிர உழைக்கும் தொழிலாளர்கள், ஊழியர்கள் நலன்களை குப்பைத் தொட்டியில் வீசிவிட்டதாகவே அதன் நடவடிக்கைகள் இன்றுவரை தெரிகின்றன. சாலைகள் அமைத்தல், ரயில்பாதைகள் அமைத்தல், மின்சார உற்பத்தி, நீர்ப்பாசன வசதிகள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த இந்த பெருநிறுவனங்கள் முன் வருவதில்லை. ஆனால் வியாபார நோக்குடன் கூடிய லாபமீட்டும் தொழிற்சாலைகள் அமைக்க முன்வருவதும் அவற்றுக்கு மத்திய, மாநில அரசுகள் சிறப்பு சலுகைகள் காட்டுவதும் அனைவரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. உற்பத்தித் துறையில் தேக்கம், யூக வணிகம், ரியல் எஸ்டேட் வணிகம் போன்றவை அரசின் ஆசியுடன் பீடுநடை போடுகின்றன.

அரசு ஊழியர்கள் அரசியலில் ஈடுபடக்கூடாது, அரசியல்கட்சி சார்புடன் செயல்படக்கூடாது என்றெல்லாம் விதிகளை வகுப்பதால் மட்டும், அரசு எதைச் செய்தாலும் அதை அரசு ஊழியர்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க முடியாது என்பதையும், அரசு ஊழியர்களும் மக்களில் ஒருபகுதியினரே என்பதையும் நாட்டில் நடக்கும் நல்லது கெட்டதுகள் பற்றி உரைக்கவும், அவற்றுக்காக போராடவும் அவர்களுக்கு உரிமை உண்டு என்பதையும் கடந்த 58 ஆண்டுகளாக அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனம் பலவிதமான போராட்டங்கள் மூலம் இந்திய அரசாங்கத்திற்கும் மாநில அரசுகளுக்கும் உணர்த்தி வந்துள்ளது. இதன் ஒவ்வொரு மாநாட்டிலும் அந்தந்த காலத்தின் அரசியல் நிலவரங்களும் அதனால் அரசு ஊழியர்களுக்கு ஏற்படும் நன்மைகளும் தீமைகளும், நாட்டின் பாதுகாப்பு, உலகப் பொருளாதாரம், மற்ற உலக நாடுகளுடனான ஒப்பீடு போன்றவைகளும் அலசப்பட்டு, இந்தியா முழுவதிலும் உள்ள மாநில அரசு ஊழியர்களின் தேவைகள்

தொகுக்கப்பட்டு, அவை தீர்மானங்களாக வடிக்கப்பட்டு, அவை அரசிடம் தரப்படக்கூடிய பிரதிநிதித்துவமாகவோ, அல்லது போராட்ட வடிவமாகவோ உருப்பெறும்.

உலக தொழிற்சங்க கூட்டமைப்பின் (WFTU) முக்கிய கரமாக செயல்படும் சர்வதேச தொழிற்சங்கத்தின் (TUI)ஒரு அங்கமாக இயங்கும் அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் (AISGEF )இந்த 16ஆம் தேசிய மாநாட்டில் இந்தியாவிலுள்ள 25 மாநிலங்களிலிருந்து 1250 பிரதிநிதிகள் கலந்து கொள்கிறார்கள் என்பது மட்டுமல்ல பல்வேறு நாடுகளிலிருந்தும் தொழிற்சங்கத் தலைவர்கள், தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபாடு கொண்ட பார்வையாளர்கள் தென்னாப்பிரிக்கா, ஆஸ்திரேலியா, ஸ்ரீலங்கா, கிரீஸ், நேபாளம் போன்ற நாடுகளிலிருந்து இந்த தேசிய மாநாட்டில் கலந்து கொள்ள இசைவு தெரிவித்துள்ளார்கள் என்பதும் அனைத்து அரசு ஊழியர்களுக்கும் பெருமை சேர்க்கும் செய்தியாகும்.

இவை மட்டுமின்றி அருகாமை மாநில முதல்வர், பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மத்திய மாநில அரசு, பொதுத்துறை, வங்கித்துறை. காப்பீட்டுத்துறை, இரயில்வே, ஆசிரியர்கள் அமைப்பு மற்றும் டெலிகாம் நிறவனத்தின் சார்பில் அதன் தொழிற்சங்க தலைவர்கள் இம்மாநாட்டில் பங்கேற்று சிறப்பித்தார்கள்.

## 16ஆம் தேசிய மாநாட்டின் நோக்கமும் இலட்சியமும்

இந்த மாநாட்டில் 2014ஆம் ஆண்டில் பாரதிய ஜனதா ஆட்சிப்பொறுப்பை ஏற்ற பின்னர் நடைபெற்றுள்ள மாற்றங்களும், அரசு ஊழியர்கள் தொழிலாளர்கள், விவசாயிகள், தினக்கூலிகள், அமைப்புசாரா தொழிலாளர்கள் போன்றோருக்கு ஏற்பட்டுள்ள நன்மை (?) தீமைகளும் அவர்கள் எதிர்கொள்ள வேண்டிய சவால்களும் எதிர்கால நடவடிக்கைகளும் கருப்பொருளாக இருக்கும். 2014ஆம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலுக்குப்பின் நாடு சென்று கொண்டிருக்கும் நிலையும், ஆட்சியாளர்கள் செய்துகொண்டிருக்கும் பிழைகளும், நீக்க வேண்டிய களைகளும் அதற்கு அரசு ஊழியர்கள் கைக்கொள்ள வேண்டிய முறைகளும் இம்மாநாட்டில் அலசப்பட்டது.

## திணிக்கப்பட்டுள்ள தீர்க்கமான போராட்டங்கள்

நாம் நம் நாட்டை ஆளும் ஆட்சியாளர்களைப்பற்றி மதிப்பீடு செய்ய வேண்டிய தருணம்தான் இது. ஆட்சியாளர்கள், மத்தியில் இருந்தாலும் மாநிலத்தில் இருந்தாலும் அவர்கள் சிந்தனைப் போக்கு சிறிதளவும் மாறவில்லை என்பதற்கான சாட்சிகள் தான் இன்றைய இந்தியாவின் காட்சிகள். ஒருபுறம் உடலுழைப்பு தொழிலாளர்களின் குறைந்தபட்ச தினசரி கூலி ரூ.600/- (அதாவது குறைந்தபட்ச மாத ஊதியம் ரூ.18000/-)ஆக நிர்ணயிக்க வேண்டும், பட்டம் பெற்ற வேலையற்ற இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு வேண்டும், அரசுத்துறைகளில் பணிபுரியும் ஊழியர்களுக்கு தற்போதைய விலைவாசிக்கேற்ற ஊதிய மாற்றம் வேண்டும், விவசாயிகளின் வறுமையுடன் கூடிய வேதனையான வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். என்றெல்லாம் பல்வேறு அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், தொழிலாளர்கள், விவசாயிகள் என பலவர்க்கப் பிரிவினரும் போராடிக்கொண்டிருக்க, மக்கள் மூலம் அதிகாரத்தை பெற்றுள்ள ஆட்சியாளர்களோ தங்களுக்குத் தாங்களே (நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள்) வரைமுறையற்ற சம்பளம் மற்றும் சலுகைகளை வழங்கி சொகுசு வாழ்க்கை வாழ்கின்றனர். உச்சமன்ற, உயர்நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் தேர்தல் ஆணையர்களுக்கு மாதம் ரூ.2.50 லட்சமாக சம்பளத்தை உயர்த்தி வழங்கி அதை 2016 ஜனவரி 1 முதல் முன்தேதியிட்டு வழங்கிட உத்தவிடுகின்றனர். கஜானாவில் பணமில்லை என்பவர்கள் எம்.எல்.ஏ.க்களுக்கு 100 சதவீதம் ஊதியத்தை உயர்த்துகிறார்கள். அரசு ஊழியர்களுக்கு நியாயமான ஊதிய மாற்றத்தை ஏற்படுத்தாததோடு, முரண்பாடுகளுடன் ஏற்படுத்தப்பட்ட ஊதியமாற்றத்திலும் தமிழகத்தில் 21 மாத ஊதிய மாற்ற நிலுவைத் தொகையை கொடுக்காமல் மறுத்துள்ளனர். விவசாயிகள், போக்குவரத்து தொழிலாளர்கள், மின்வாரிய ஊழியர்கள், மாணவர்கள் என அனைத்து பிரிவினரும் ஆட்சியாளர்களின் நடவடிக்கைகளுக்கு எதிராக போராடவேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டுள்ளனர்.

## பாரதிய ஜனதா அரசின் (வே)சாதனைகள்

2014ஆம் ஆண்டு பாராளுமன்ற தேர்தல் பிரசாரத்தில் பாரதிய ஜனதா கட்சி சார்பில் மூன்றுவிதமான முழக்கங்கள் முன் வைக்கப்பட்டன. (1) (அச்சே தின்) இனி நல்லகாலம் பிறக்கும். (2) நாட்டின் பாதுகாப்புக்கு வலுவான கொள்கை உருவாக்கப்படும் (3 ) ஊழலுக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

இனி நல்லகாலம் பிறக்கும் என்ற பிரச்சாரத்தை மக்கள் ரசித்ததோடு மட்டுமல்லாமல் நம்பவும் செய்தனர். நம்புவதற்கு முக்கிய காரணம், ஊழலில் சம்பாதித்த கோடிக்கணக்கான ரூபாய்கள் வெளிநாட்டில் பதுக்கப்பட்டிருந்தாலும் அவற்றைக் கண்டுபிடித்து இந்தியா கொண்டுவந்து ஒவ்வொருவருடைய கணக்கிலும்




“பொருளாதார சீர்திருத்தம் போதுமான வேலை வாய்ப்பை உருவாக்கத் தவறியதோடு இருக்கும் வேலையையும் பாதுகாக்கத் தவறிவிட்டது.”
– பேராசிரியர் வெங்கடேஷ் பி.ஆத்ரேயா



“கல்வியும், சுகாதாரமும் தனியார்மயமானால் பெண்கள் பெருமளவில் பாதிக்கப்படுவார்கள்.”
– பேராசிரியர் சந்திரா




“காலிப் பணியிடங்களை பூர்த்தி செய்யாமல், பணிகளை ஒப்பந்தம், அவுட்சோர்சிங் முறையில் அறிமுகப்படுத்தி வருவதால் பொதுமக்களுக்கு சேவை செய்வதில் குறைபாடு ஏற்படுகின்றன.”
– ஸ்ரீகுமார், பொதுச் செயலாளர், AISGEF



அகில இந்திய இன்சூரன்ஸ் ஊழியர் சங்கத்தின் தோழர் கிரிஜா அவர்களின் கருத்துரை




மாண்புமிகு கோபாலகிருஷ்ண காந்தி ஐஏஎஸ் அவர்களின் கருத்துரை



கருத்தரங்கில் பங்கேற்றவர்களில் ஒரு பகுதியினர்

ரூ.15 லட்சம் போடப்படும் என்று உறுதி அளிக்கப்பட்டதுதான். இந்த நம்பிக்கையை இன்னும் உறுதிபடுத்தும் அளவிற்கு பிரச்சாரத்தில் ''ஊழல் செய்தவர்கள் எவ்வளவு செல்வாக்கானவர்களாக இருந்தாலும் அவர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு தண்டிக்கப்படுவார்கள்'' என்று வலு சேர்க்கப்பட்டது. நூறு நாளில் ஊழலை ஒழித்து கறுப்புப் பணத்தை மீட்போம், மக்களின் வங்கிக் கணக்கில் ரூ.15 லட்சத்தை போடுவோம் என்ற இரண்டு பிரச்சாரங்களும் தேர்தல் காலத்தின் தேர்ந்தெடுத்த பொய்யுரைகள் என்பது 101வது நாளிலேயே உணரப்பட்டுவிட்டது. அதைப்பற்றி மக்களும் எதிர்கட்சியினரும் திரும்பத் திரும்பக் கேட்டு அலுத்துப்போனதுதான் மிச்சம். பாஜக அரசு பதவிக்கு வந்து நான்காவது ஆண்டு நிறைவுறும் நிலையில் ஊழல் ஒழிப்பில் ஒரு துளி முன்னேற்றமும் ஏற்பட்டுவிடவில்லை என்பது தான் நிதர்சனமாகியுள்ளது.

ஊழல் ஒழிப்பில் பாஜக அரசின் கையாலாகாத்தனம், வங்கிகளில் கடன் வாங்கிவிட்டு திருப்பிச் செலுத்தாத தொழிலதிபர் விஜய் மல்லய்யா பிரிட்டனுக்கு தப்பிச் சென்றதன் மூலமாகவும், நீரவ் மோடி வங்கியில் கடன் வாங்க செய்த பித்தலாட்டங்கள் வாயிலாகவும், தற்போது ஒவ்வொரு வங்கியாக மூடப்படக்கூடிய அபாய சூழலாலும் திரும்பத் திரும்ப நிரூபிக்கப்பட்டு வருகிறது. மோடி, மக்கள் நலனுக்கான நபர் அல்ல. அவர் கார்ப்பரேட் கம்பெனிகளின் காப்பாளர், ஊழல்வாதிகளுக்கு உதவி செய்பவர் என்ற அவப் பெயரை ஏற்படுத்தியுள்ளது. இந்த ஆட்சியின் வீராப்பு எல்லாம் விவசாயத்திற்காக டிராக்டர் வண்டி வாங்கிய விவசாயி அதற்கான கடன் தவணையை திருப்பிச்செலுத்த முடியாத நிலையில், பணம்கேட்டு அவரை நையப் புடைப்பதும், கடன்கேட்கும் பொதுமக்களிடம் இல்லாத ஆவணங்களை எல்லாம் கேட்டு கடன் இல்லை என்று கையை விரிப்பதுமாக ஆகியுள்ளது. வங்கியில் ஒரு பத்தாயிரம் ரூபாய் கடன்வாங்கிட ஒரு பொதுஜனம் படும் அவஸ்தைகளும் அலைகழிப்புகளும் சத்தியசோதனை போன்ற சுயசரிதை எழுதுமளவிற்கு சம்பவங்கள் கொண்டது என்பது எல்லா நடுத்தர மக்களும் அறிந்துள்ள நிலையில், சிலபேர்கள் மட்டும் பொய்யான ஆவணங்கள் மூலம் வங்கிகளில் நூறு முதல் ஆயிரக்கணக்கான கோடிகளுக்கு கடன்பெறுவதும் அடமான சொத்துக்கள் இல்லாமலேயே வங்கிகள் கடன் கொடுப்பது எப்படி என்ற கேள்வி இன்று ஒவ்வொரு இந்தியப் பிரஜையின் மனதிலும் ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக சில வங்கிகள் திவாலாகும் சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதையும் நாம் காண்கிறோம்.

அரசு ஊழியர்களைப் பொறுத்தவரை புதிய பென்சன் திட்டம் (NPS) திரும்பப் பெறப்பட்டு பழைய பென்சன் திட்டமே தொடரவேண்டும் என்ற கோரிக்கைகள் வலுத்து வருகின்றன. மேலும் மத்திய அரசின் 7வது ஊதிய மாற்றத்தில் பல்வேறு படிகள் (Allowances) மறுக்கப்பட்டுள்ளன. சில படிகள் (Allowances) குறைக்கப்பட்டுள்ளன. தமிழக அரசு ஊழியர்களைப் பொறுத்தவரை 1.1.2016 முதல் பெற வேண்டிய ஊதிய மாற்றம் 21 மாதங்களுக்குப் பிறகு அதாவது 1.10.2017 முதல் ஏற்படுத்தப்பட்டு 21 மாத ஊதியமாற்ற நிலுவை மறுக்கப்பட்டுள்ளது. நாட்டிலேயே அரசுக்கு ஒழுங்காக வருமான வரி செலுத்துபவர்கள் அரசுத்துறை ஊழியர்கள். ஆனால் 7வது ஊதிய மாற்றத்திற்குப் பின்னர் வருமான வரியில் நிலையான கழிவும், அரசுத்துறை சேமிப்புகள் முதலீடுகள் போன்றவற்றில் காட்டப்படும் சலுகையின் உச்சவரம்பும் ஊதிய மாற்ற உயர்வுக்கு ஏற்ற வகையில் உயர்த்தப்படாத அநீதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

பல்வேறு தொழிற்சங்கங்களும் அமைப்புகளும் தனியார் மயத்தை எதிர்த்து தொடர்ந்து குரல் கொடுத்துக் கொண்டிருக்கும் நிலையில் மத்திய மாநில அரசுகளோ தனியார்மயத்தை நோக்கி துரித நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றன. மத்தியஅரசின் சுண்டுவிரல் ஆசைவுக்கு, இடுப்பில் துண்டுகட்டி சேவகம் செய்யும் தமிழக அரசு தனியார்மயத்தை உறுதிபடுத்தும் வகையில் அரசாணை எண்.56ஐ வெளியிட்டு மக்களை நலனை கேள்விக்குறியாக்கியுள்ளது. ஏற்கெனவே காலியாக விடப்பட்டுள்ள மூன்றரை லட்சம் பணியிடங்களில் வேலை வாய்ப்பகங்களில் பதிவு செய்து இலவு காத்த கிளியாக காத்திருக்கும் இளைஞர்களின் எதிர்காலமும், பட்டப்படிப்பு படித்துவிட்டு தேர்வாணைய தேர்வுகளுக்காக தயாராக இருக்கும் மாணவர்களின் எதிர்காலமும் குழிதோண்டி புதைக்கப்பட்டுவிடும். ஒப்பந்த மற்றும் அவுட்சோர்சிங் முறையில் ஆட்களை நியமிப்பதன் மூலமாக வேலை வாய்ப்பகங்களில் அரசு அல்லது அரசுசார்ந்த துறைகளில் வேலைக்காக பதிவு செய்து காத்திருக்கும் சுமார் 37 லட்சம் இளைஞர்களும் 42 லட்சம் பெண்களும் திருவோடு ஏந்தி தெருவோடு போகும் அவலமோ தீவிரவாத கும்பலோடு சேர்ந்து தேசத்துரோகத்துக்கு துணை போகும் அபாயமோ ஏற்பட்டுவிடும் என்பதை ஒருவித பயத்துடனேயே பதிவு செய்ய வேண்டியுள்ளது.

பன்னாட்டு உணவுக்கொள்கை ஆராய்ச்சி நிறுவனம் (IFPRI) வெளியிட்டுள்ள உலக 2017ஆம் ஆண்டிற்கான வறுமைக் குறியீட்டு பட்டியலில், பட்டியலிடப்பட்டுள்ள 119 நாடுகளில் இந்தியா 100 வது இடத்தைப் பிடித்துள்ளது. இந்தியாவிற்கு கீழே உள்ள இரண்டு ஆசிய நாடுகள் பாகிஸ்தானும், ஆப்கானிஸ்தானும் மட்டும்தான். சர்வதேச நாணய நிதியம் (IMF) சமீபத்தில் 'உலகப் பொருளாதார

கண்ணோட்டம்' இதழில் இந்தியாவின் வளர்ச்சி குறைந்துள்ளது என்றும் அதற்குக் காரணம் பண மதிப்பிழப்பு நடவடிக்கையும், ஜிஎஸ்டி வரிவிதிப்பில் நிலவும் குழப்ப நிலையும் தான் என்று குறிப்பிட்டுள்ளது.

இதேபோல, கறுப்புப் பணத்தை பெருமளவுக்கு வெளியே கொண்டுவருகிறேன் பேர்வழி என்று 1000 மற்றும் 500 ரூபாய் நோட்டுக்களின் பணமதிப்புகளை அதிரடியாக நீக்கி கிராமப்புர பொருளாதாரத்தையும், அமைப்புசாரா தொழில்களையும் சீர்குலைத்து ஏராளமான மக்களின் வேலைவாய்ப்பையும், பொருளாதார நிலையையும் பறித்ததுதான் பாஜக அரசின் பண மதிப்பிழப்பு நடவடிக்கையால் ஏற்பட்ட லாபம். ஏழைகளும் நடுத்தரமக்களும் படிப்பறிவில்லாதவர்களும் இந்த அறிவிப்பினால் சொல்லொணா இன்னல்களுக்கு ஆளானதும் பழைய நோட்டுக்களை புது நோட்டுக்களாக மாற்ற நாள் முழுதும் கால்கடுக்க வங்கி வாசல்களில் காத்திருந்து சிலர் அங்கேயே இறந்துபோனதும் தான் மிச்சம்.

சற்று உற்று நோக்கினால் கடந்த மூன்றரை ஆண்டுகளில் பாரதிய ஜனதா ஆட்சி எடுத்த எல்லா நடவடிக்கைகளிலும் கடுமையாக பாதிக்கப்பட்டது, அன்றாடங்காய்ச்சிகளும், விவசாயிகளும், தொழிலாளர்களும், அரசு ஊழியர்களும்தான். காஸ் சிலிண்டருக்கான மானியம் பெறுவதற்கு வங்கிக் கணக்கை இணைக்க கட்டாயப்படுத்தப்பட்டதிலிருந்து ஆதார் எண்ணை ஒவ்வொரு மூலை முடுக்கிற்கும் அவசியம் என உரைத்து மக்களை அலைகழித்துக் கொண்டிருக்கிறது இவ்வரசு. படிக்காத, பாமர மக்கள் நிறைந்துள்ள இந்நாட்டில், டீ குடிக்கக்கூட வக்கில்லாதவனிடம் டிஜிட்டல் இந்தியா பற்றிய போதனைகள் எந்தவிதப் பலனையும் ஏற்படுத்தப் போவதில்லை. அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வு, காய்கறிகள் மீதான விலையேற்றம் மற்றும் பெட்ரோல் மற்றும் டீசல் விலைகள் நாள்தோறும் நிர்ணயிக்கும் போக்கு போன்றவை மத்திய அரசின் மீது மக்களுக்கு மிகுந்த வெறுப்பைத் தோற்றுவித்துள்ளன.

தமிழகத்தைப் பொறுத்த வரையில் கடந்த இரண்டு ஆண்டுகளாக தலையில்லாத ஆட்சியின் தலைமையில் காலில்லா அமைச்சரவையின் களிநடனம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. கல்வி, காவிரி, கலாச்சாரம், பொதுசேவை வரி, மீனவர் பிரச்னை, மாணவர் எதிர்காலம், வேலை வாய்ப்பு என அனைத்துத்துறைகளிலும் மாநிலத்தின் உரிமைகள் அனைத்தும் மத்திய அரசிடம் அடகு வைக்கப்பட்டு, நிர்வாகம் சீர்கெட்டு, எத்திசையில் பார்த்தாலும் போராட்டங்களும், ஆர்ப்பாட்டங்களுமாய் மக்கள் வீட்டைவிட்டு வெளியே வந்திருக்கிறார்கள்.

தமிழகத்தில் நடைபெறும் தலையாட்டி பொம்மை ஆட்சியை பயன்படுத்தி மத்திய அரசாங்கம் உச்சநீதிமன்றம் விதித்துள்ள காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க வேண்டும் என்ற தீர்ப்பை காலில் போட்டு மிதித்துள்ளது. இந்த நாட்டின் உயரிய நீதி அமைப்பான உச்ச நீதிமன்றம் 25 வருடகாலமாக நடந்து வரும் ஒரு வழக்கின் அனைத்து அம்சங்களையும் ஆராய்ந்து ஒரு தீர்ப்பை வழங்கிய பிறகும் அதை நடைமுறைப்படுத்த வேண்டிய இந்த நாட்டின் உயரிய நிர்வாக அமைப்பாக இருக்கும் மத்திய அரசே அதை அமல்படுத்த முன்வராத நிலையில் பாமர மக்களும் மற்றவர்களும் நீதிமன்றத் தீர்ப்புகளை எப்படி மதிப்பார்கள் என்ற கேள்வி இன்று நாடுமுழுவதும் கேட்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஜல்லிக்கட்டு தொடங்கி, ஹைட்ரோ கார்பன் தொடர்ந்து தற்போது ஸ்டெர்லைட் ஆலை வரைக்கும் மக்களின் மனநிலையை மதிக்காமல் மத்திய அரசு செயல்படுவதும் மாநில அரசு அதற்கு துணைபோவதும், காவிரி மேலாண்மை வாரியம் அமைக்காமல் காலஅவகாசம் கேட்பதும் தமிழகத்தை மத்திய அரசு மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடத்துகிறது என்பதற்கான ஆதாரங்களாகும்.

மக்கள் நலன், மக்கள் பணி, விவசாயம், வறட்சி, தொழில் வளர்ச்சி, கல்வி போன்ற எல்லாதுறையிலும் அரசின் கவனம் பூஜ்யமாகியிருக்கிறது. தமிழ்நாட்டில் தொழில் தொடங்கிய பிற நாட்டு நிறுவனங்கள் தத்தளித்துக் கொண்டிருக்கின்றன. கோடிக்கணக்கான பணத்தை மாமூலாக கொடுத்தால் தான் தொழில் தொடங்க அனுமதி கிடைக்கும் என்ற இழிநிலையால் புதிய தொழில் நிறுவனங்கள் தமிழகத்தில் தொழில்செய்ய முன் வராமல் வேறு மாநிலங்களை தேடிப் போய்கொண்டிருக்கின்றன. தமிழகத்தில் உள்ள லட்சக் கணக்கான இளைஞர்களின் வேலை வாய்ப்பு லட்சியங்கள் இதனால் சுக்குநூறாய் நொறுங்கிக் கொண்டிருக்கின்றன.

மக்கள் நலனில் அக்கரையில்லாத அரசு, பதவி ஒன்றையே பசை போட்டு ஒட்டியிருக்கும் ஆட்சி, செயல்பாடு இழந்த அரசாங்கம், மோடி அரசின் ஏஜெண்டாக மாறியிருக்கும் முதல்வர், ஊழல் குற்றச்சாட்டுக்கள் ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கப்பட்டு மக்களே வெட்கித் தலைகுனியும் அளவுக்கு மரியாதை இழந்திருக்கும் அமைச்சர்கள், மக்கள் நலனாவது மண்ணாங்கட்டியாவது மீதமிருக்கும் மூன்றாண்டுகால ஆட்சியில் முடிந்தவரை பணம் சேர்ப்பதொன்றே லட்சியமாகக் கொண்டு தொகுதியையும், வாக்களித்த மக்களையும் மறந்துபோன எம்எல்ஏக்கள். இவற்றுக்கு இடையில்தான் அரசு ஊழியர்களாகிய நாம் எல்லோருக்குமான உரிமைக்கான போராட்டங்களை நடத்தி வருகிறோம்.




சென்னை மாதவரத்தில் நடைபெற்ற அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் 16ஆவது தேசிய மாநாட்டில் மருத்துவர்கள் கிருஷ்ணன், பாலகிருஷ்ணன் எழுதிய "கிராமப்புற ஏழை எளிய மக்களின் வாழ்வில் மகாத்மா காந்தி கிராமப்புற வேலை வாய்ப்பு உறுதி திட்டம் ஏற்படுத்தியுள்ள தாக்கங்கள்" என்ற நூலை அகில இந்திய பொதுச்செயலாளர் ஸ்ரீகுமார் வெளியிட பேராசிரியர் வெங்கடேஷ் ஆத்ரேயா பெற்றுக் கொண்டார். உடன் அகில இந்திய நிர்வாகிகள்.னி




ல் கலந்து கொண்ட மகளிர் பிரதிநிதிகள்



மாநாட்டு பிரதிநிதிகளில் ஒரு பகுதியினர்

# மாநாட்டு கலை நிகழ்ச்சிகள்









சென்னை மாதவரத்தில் நடைபெற்ற அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் 16ஆவது தேசிய மாநாட்டில் பேராசிரியர் காளீஸ்வரன் தலைமையிலான மாற்று ஊடக மையத்தின் சார்பில் சிலம்பம், தப்பாட்டம் உள்ளிட்ட பல்வேறு கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன.

சென்ற ஊதிய மாற்றத்தின் போது அலுவலர் குழு, ஒருநபர் குழு, குறைதீர்க்கும் குழு என பலவிதமான குழுக்களை அமைத்து அரசு ஊழியர்களின் ஊதிய மாற்றத்தில் முரண்பாடுகளுக்கு மேல் முரண்பாடுகளை ஏற்படுத்தி அலைகழித்த அதிகார வர்க்கமும் அரசாங்கமும், அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் இணைந்து ஜாக்டோ-ஜியோ என்ற கூட்டமைப்பின் கீழ் ஒன்றுபட்டு நடத்திய பலமான போராட்டங்களுக்குப் பின் நீதிமன்ற உத்தரவின் பேரில் தமிழக அரசு, எட்டாவது ஊதிய மாற்றத்தை, முரண்கள் எதையும் சரி செய்யாமல் அமல்படுத்தியது. பழைய பென்சன் திட்டத்தை அமல்படுத்துதல், சிறப்பு காலமுறை ஊதியம் பெற்றுவரும் ஊழியர்களுக்கு வரையறுக்கப்பட்ட ஊதியத்தை வழங்குதல், தொகுப்பூதியம், மதிப்பூதியம் மற்றும் வரையறுக்கப்படாத ஊதிய விகிதங்களை ஒழித்துக்கட்டுதல் மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையான படிகள் போன்ற கோரிக்கைகள் எதையும் பரிசீலிக்காமல் அறிவித்திருப்பதும், மேலும் 1.1.2016ம் தேதி முதல் வழங்கப்பட வேண்டிய 21 மாத நிலுவைத் தொகையை வழங்க மறுத்திருப்பதும் எல்லா அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் மத்தியிலும் வெறுப்பையும் கோபத்தையும் ஏற்படுத்தியுள்ளது .

இத்தகைய சூழ்நிலையில்தான் அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் 16வது தேசிய மாநாடு சென்னையில் நடந்து முடிந்திருக்கிறது. மேலே பரிமாறிக்கொண்ட செய்திகளைப் பொறுத்து ஆய்வு செய்து, மக்கள் விரோத, ஊழியர் விரோத, மற்றும் தொழிலாளர் விரோத கொள்கைகளை அமலாக்கத் துடிக்கும் மத்திய மாநில அரசுகளின் நடவடிக்கைகளை தடுத்து நிறுத்தவும், பறிக்கப்பட்டுள்ள, தடுக்கப்பட்டுள்ள, மறுக்கப்பட்டுள்ள அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் உரிமைகளுக்கான நீண்டகால போராட்டங்களைத் திட்டமிடவும் இந்த மாநாடு வழிகாட்டியுள்ளது. இந்த மாநாட்டில் தமிழ்நாட்டில் அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் இணைந்து ஜாக்டோ-ஜியோ பதாகையின் கீழ் உரிமைகளுக்காக போராடி வெற்றிகண்டது போல் அகில இந்திய அளவில் அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் மற்றும் பொதுத்துறை ஊழியர்களை ஒன்றிணைத்து அரசுத் துறைகள், அரசு அமைப்புகள் தனியார்மயமாவதை தடுப்பதற்கும், மக்கள் நலனைக் காப்பதற்கும், வறியவர்கள், ஏழை எளியவர்கள் வாழ்வில் ஒளியேற்றும் நடவடிக்கைகளை எடுப்பதற்கும் இந்த தேசிய மாநாடு ஒரு துவக்கப்புள்ளியாக உள்ளது.

பொதுவாக எல்லா மாநாடுகளிலும் பேசிக் களைவதைப்போல் இந்த மாநாடு இல்லாமல், புதிய சிந்தனைகளை, புதிய போராட்ட நெறிகளைத் தோற்றுவித்துள்ளது.

> **“தங்களது துன்பங்களை வெறுமனே சகித்துக் கொண்டு போகாமல்**
> **அவற்றை எதிர்த்துப் போராட நமது மக்களுக்குக் கற்றுக்**
> **கொடுக்க வேண்டும். அவர்கள் தங்கள் உழைப்பை நேசிக்கவும்,**
> **நிமிர்ந்து நிற்கவும், செயலாற்றவும் கற்றுத்தர வேண்டும்.’’**

என்ற தோழர் மார்க்சிம் கார்க்கியின் கருத்துப்படி இந்த மாநாட்டில் கலந்து கொண்ட ஒவ்வொரு பிரதிநிதியும் இந்த சமூகத்துக்காகப் போராடும், போராட்ட விதைகளைக் கொண்ட விதைப் பந்துகளாக உருமாறி இருக்கிறார்கள். அவர்கள் தன்னலமற்ற தியாகங்கள் மூலம் இந்த பூமியை சுயநலமற்ற பொது நலன் சார்ந்த புத்தம்புதுப் பூமியாய் மாற்றிக் காட்டுவார்கள் என்ற நம்பிக்கை ஒளிக்கீற்று இப்போதே தெரிய ஆரம்பித்து விட்டது! ❖

*AISGEF தேசிய மாநாட்டில் அகில இந்திய நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர்.*



மு.அன்பரசு

*சம்மேளனத்தின் தலைவராக* ***சுபாஷ் லம்பா****, பொதுச் செயலாளராகதோழர்* ***ஸ்ரீகுமார்****, தோழர் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். தமிழகத்திலிருந்து தோழர்* ***மு.அன்பரசு*** *உதவிப் பொதுச் செயலாளராகவும், தோழர்* ***மொ.ஞானத்தம்பி*** *அகில இந்திய செயலாளராகவும் தேர்வு செய்யப்பட்டார்.*

*மாநாட்டில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் சார்பில் அகில இந்திய மையத்திற்கு கட்டிட நிதியாக ரூ. 5 லட்சமும், ஸ்தாபன நிதியாக ரூ. 3,78,795 வழங்கப்பட்டன.*



மொ.ஞானத்தம்பி

### கே.கே.என். குட்டி



மத்திய அரசு ஊழியர்கள் தொழிலாளர்கள் கூட்டமைப்பு (சிசிஜிஇஎப்) தலைவர் கே.கே.என்.குட்டி: "பொருளாதார வளர்ச்சி என்ற பெயரில் நாட்டின் உயர்தன்னாளுமை விட்டுக்கொடுக்கப்படுகிறது. தொழிலாளர், ஊழியர் நலன்களும் உரிமைகளும் காவுகொடுக்கப்படுகின்றன." "சிக்கன நடவடிக்கைகள் என்ற பெயரில் எளிய மக்கள் மீதுதான் கைவைக்கப்படுகிறது. அரசியல்மாற்றம் மட்டுமே இதை மாற்றும். ஒன்றுபட்ட போராட்டமே அந்த அரசியல் மாற்றத்தை ஏற்படுத்தும்."

### சி.ஜே. நந்தகுமார்




இந்திய வங்கி ஊழியர்சம்மேளனம் (பெஃபி) தலைவர் சி.ஜே.நந்தகுமார்: "பல்லாயிரக்கணக்கான மக்களோடு தினமும்உரையாடுகிற வாய்ப்பு கிடைக்கப் பெற்றவர்கள் மாநில அரசு ஊழியர்கள்.அதைப் பயன்படுத்திக்கொண்டு மாற்றங்கள் குறித்த சிந்தனைகளை மக்களிடையே கொண்டுசெல்ல முடியும்." வங்கி மோசடிகள் பற்றிய செய்திகள் தற்போது அதிகம் வருகின்றன. வெளியே பேசப்படாத விசயமாக இருப்பது என்னவென்றால், வங்கிகளின் கடன் வழங்கல் கொள்கையை மத்திய அரசு மாற்றியதுதான் பிரதானமான காரணம் என்பதேயாகும். அந்தக் கொள்கை மாற்றத்தால் மிகப்பெரும் நிறுவனங்களுக்கும் பெரும்புள்ளிகளுக்குமே கோடிக்கணக்கில் கடன் கிடைக்கும் என்ற நிலைமை ஏற்படுத்தப்பட்டது. பொதுத்துறை வங்கிகளும், பழைய தனியார் வங்கிகளும் மட்டுமல்ல, புதிதாகத் தொடங்கப்பட்ட தனியார் வங்கிகளும் நீரவ் மோடிகளின் முன்னால் வரிசையில் நிற்கிற சூழல் ஏற்படுத்தப்பட்டது." வராக்கடன்களை மீட்பது தொடர்பான கொள்கை அறிவியல் அணுகுமுறைக்குப் புறம்பானதாக இருக்கிறது என்றார் அவர்.

### கே.ராஜேந்திரன்



இந்திய மாநிலப் பள்ளி ஆசிரியர் சங்க (எஸ்டிஎப்ஐ) தலைவர் கே. ராஜேந்திரன்: "வளர்ந்த முதலாளித்துவ நாடுகளில் கூட பள்ளிக் கல்வி இன்னமும் அரசாங்கத்தின் முழுப்பொறுப்பிலேயே இருக்கிறது. இந்தியாவில் திட்டமிட்ட முறையில் கல்வி வெறும் வணிகச்சரக்காக மாற்றப்பட்டு விட்டது." அருகமைப் பள்ளி உள்ளிட்ட கொள்கைகளில் இன்று கேரளம் இந்தியாவுக்கே வழிகாட்டியாக இருக்கிறது. நாடு முழுவதும் அதை உறுதிப்படுத்தும் இயக்கத்திற்கும் அரசு ஊழியர்களும் இதர தொழிற்சங்கங்களும் ஆதரவாக நிற்க வேண்டும்.

### நெ.இல. சீதரன்



தமிழ்நாடு ஓய்வூதியர் சங்கத் தலைவர் நெ.இல.சீதரன்: நான்காண்டு கால பாஜக ஆட்சியின் ஒவ்வொரு கொள்கையும் மக்கள் செல்வத்தை உறிஞ்சுவதாக, துயரங்களைப் பெருக்குவதாக இருக்கிறது. பணமதிப்பு ஒழிப்பு, ஜிஎஸ்டி போன்ற உதாரணங்களை எடுத்துக்காட்டிய அவர், ரயில்வே, பொதுத்துறை வங்கிகள் மற்றும் பல்வேறு அரசுப் பணிகள் தனியார்மயமாக்கப்படும் அச்சுறுத்தலான நிலைமை உருவாகியிருக்கிறது. சத்துணவு ஊழியர்கள், அங்கன்வாடி பணியாளர்கள் போன்ற லட்சக்கணக்கான தொழிலாளர்கள் வெறும் தொகுப்பூதியர்களாக வைக்கப்பட்டிருப்பதும் தொழிற்சங்க இயக்கத்தின் முன் ஒரு சவாலாக வந்துள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டினார். மத்திய அரசும் மாநில அரசும் தொடுக்கிற இப்படிப்பட்ட தாக்குதல்களுக்கு எதிராக வலுவான இயக்கம் காண்பது குறித்து மாநாட்டில் விவாதிக்கப்பட வேண்டும்.




சென்னை மாதவரத்தில் நடைபெற்ற அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் 16ஆவது தேசிய மாநாட்டில் சம்மேளனத்தின் முன்னாள் அகில இந்திய தலைவர் மறைந்த ஆர்.முத்துசுந்தரம் துணைவியார் திருமதி உஷா ராணிக்கு அகில இந்திய பொதுச் செயலாளர் ஸ்ரீகுமார், மாநிலத் தலைவர் மு.சுப்பிரமணியன் ஆகியோர் நினைவு பரிசு வழங்கி கௌரவித்தனர். உடன் பொதுச் செயலாளர் மு.அன்பரசு, தேசிய செயற்குழு உறுப்பினர் எம்.ஞானத்தம்பி ஆகியோர் உள்ளனர்.




மாற்று ஊடகக் குழுவினரின் கலை நிகழ்ச்சிகள்




'பீட்' கலைக்குழுவின் சேர்ந்திசை




மாநாட்டில் தேர்வு செய்யப்பட்ட AISGEF புதிய நிர்வாகிகள்




மாநாட்டு பேரணியை துவக்கி வைக்கும் AISGEF பொதுச் செயலாளர் ஸ்ரீகுமார்



மாநாட்டு பேரணியில் பங்கேற்ற பெண் ஊழியர்களில் ஒரு பகுதியினர்

**மக்களிடமிருந்து தொழிலாளர்களை அந்நியப்படுத்தும் புதிய தந்திரங்களை முறியடிக்க வேண்டும்:**

**– ஏ.கே.பத்மநாபன்**



அகில இந்தியத் துணைத் தலைவர், சிஐடியு

பொதுமக்களிடமிருந்து தொழிலாளர்களை அந்நியப்படுத்தும் புதிய தந்திரங்களை முறியடிக்க, சமுதாயத்திற்காகவும் போராடுகிற ஒன்றுபட்ட இயக்கங்கள் வலுவாக நடைபெறவேண்டும். “தொழிற்சங்க இயக்க வரலாறு மட்டுமல்ல, இந்திய நாட்டின் வரலாறே இன்றுமிக நெருக்கடியான கால கட்டத்தை எதிர்கொண்டுள்ளது. மத்தியரசின் அநீதிகளுக்கு எதிரான போராட்டங்கள் அதிகரித்து வருகின்றன. ஜனநாயகம் மறுக்கப்படுவதற்கு எதிராக நீதித்துறையிலேயே வெளிப்படையான குமுறல்கள் ஒலிக்கின்றன.” தொழிலாளர்களை எப்போது வேண்டுமானாலும் வெளியேற்றத் தோதாகக் குறிப்பிட்ட காலத்திற்கு மட்டும் வேலையில் நியமிப்பதற்கு ஏற்றவகையில் சட்டவிதிகள் மாற்றப்படுகின்றன. கார்ப்பரேட் நிர்வாகங்களுக்குச் சாதகமான அந்த நடவடிக்கையை எதிர்த்து கேரளத்தில் தொழிற்சங்கங்களின் அறைகூவலை ஏற்று வெற்றிகரமாகத் தொழிலாளர் வேலைநிறுத்தம் நடைபெற்றது. மேற்குவங்கத்தில் தொழிற்சங்கங்களின் அடிப்படையான ஜனநாயக உரிமைகள் பறிக்கப்படுகின்றன.

ஆகவே அதற்கு எதிரான போராட்டங்கள் அலையென எழுகின்றன. நாட்டின் எல்லா அங்கங்களிலும் அரசமைப்பு சாசனம் செயல்படுவது உறுதிப்படுத்தப்பட வேண்டும். வங்கத்திலும் திரிபுராவிலும் இதற்கு நேர்மாறாக நடைபெறுகிறது. அரசமைப்பு சாசனத்தின் வழிகாட்டும் நெறிகளில் ஜனநாயகம், மதச்சார்பின்மை, சோசலிசம் ஆகியவை பொறிக்கப்பட்டுள்ளன. சோசலிச லட்சியத்தைக்கூட இப்போது வற்புறுத்தத் தேவையில்லை.

ஆனால் ஜனநாயகத்திற்கும் மதச்சார்பின்மைக்கும் விசுவாசமாக இருங்கள் என்று மத்திய ஆட்சியாளர்களிடம் வலியுறுத்த வேண்டியிருக்கிறது. விடுதலைப் போராட்டத்தின்போது இரட்டைக்குழல் துப்பாக்கி என்று சொல்லத்தக்க வகையில் பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்தும், முதலாளிகளை எதிர்த்தும் போராடிய பாரம்பரியம் தொழிற்சங்க இயக்கத்திற்கு உண்டு. இன்றைய தலைமுறையைச் சேர்ந்த இளம் தொழிலாளர்களில் பலர் அந்தப் பாரம்பரியத்திலிருந்து விலகி நிற்கிறார்கள். இந்தத் தலைமுறை இடைவெளி இணைக்கப்பட்டாக வேண்டும். இவ்வாறு தொழிலாளர்களை விலகி நிற்க வைப்பது 1991ல் பொருளாதார சீர்திருத்தம் என்ற பெயரில் தனியார் மயமாக்கல், தாராளமயமாக்கல், உலகமயமாக்கல் நடவடிக்கைகளோடு தொடங்கியது. அப்போதிருந்த நரசிம்மராவ், மன்மோகன்சிங், இன்றைய நரேந்திரமோடி என்று வேறு வேறு பிரதமர்களை நாடுபார்த்து விட்டது.

ஆனால் தாராளமயமாக்கலைச் செயல்படுத்துவதில் அவர்கள் எல்லோரும் ஒரே விதம்தான். தொழிலாளர்களுக்கோ பொதுமக்களுக்கோ அளித்த வாக்குறுதிகளை மறந்துவிட்டு, கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் அவர்களது சிந்தனை ஒரேமாதிரியானது தான். தொழிலாளர்கள் இன்று தனித்து விடப்பட்டிருக்கவில்லை. விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள், மாணவர்கள், இளைஞர்கள், மகளிர், ஒடுக்கப்பட்டவர்கள் என்று, கடந்த மூன்றாண்டு காலத்தில், சமுதாயத்தின் எல்லாப் பிரிவுகளையும் சேர்ந்த மக்கள்போராட்டக் களத்தில் இறங்கியிருக்கிறார்கள். ஒடுக்கப்பட்டவர்களான தலித் மக்களுக்கு எதிரானத் தாக்குதல்கள் திட்டமிட்ட முறையில் தொடுக்கப்படுகின்றன. அதை எதிர்த்து தலித்துகளும் இதர ஒடுக்கப்பட்டோரும் நடத்துகிற போராட்டங்களில் அரசு ஊழியர்கள் உள்ளிட்ட தொழிலாளி வர்க்கம் ஒன்றுபட்டு நின்றாக வேண்டும். அரசு ஊழியர்களையும் ஒட்டுமொத்தத் தொழிலாளர்களையும் மக்களுக்கு எதிரானவர்களாக நிறுத்தும் தந்திரமும் இதில் இருக்கிறது. இப்படிப்பட்ட தந்திரங்களும் முறியடிக்கப்பட வேண்டும். அந்தப் போராட்டத்தில் வெற்றிபெற, அரசு ஊழியர்கள் சமுதாயத்திற்கும் பொது மக்களுக்குமான தங்களது பொறுப்பை உணர்ந்து செயல்பட வேண்டும். தங்களை நாடிவரும் பொது மக்களுக்கான இடங்கள்தான் அரசு அலுவலகங்கள் என்ற எண்ணத்தை ஏற்படுத்துவதோடு இது இணைய வேண்டும்.

**“இந்திய பொருளாதார வளர்ச்சி எதிர்கொள்ளும் சவால்கள்”**

**– பேரா. வெங்கடேஷ் ஆத்ரேயா**



இந்தியாவில் கடந்த 25 ஆண்டுகளுக்கும் மேலாக மேற்கொள்ளப்பட்ட பொருளாதார சீர்திருத்தங்கள் ஏழைகள், செல்வந்தர்கள் இடையே மிகப்பெரிய இடைவெளியை ஏற்படுத்தியுள்ளது. தாராளமயம், தனியார்மயம், உலகமயம் என்ற நவீன தாராளமய சீர்திருத்தங்கள் இந்தியாவில் அமல்படுத்தப்பட்டு 27

ஆண்டுகள் கடந்துவிட்டன. இந்தக்கொள்கைகளை முதலில் காங்கிரஸ் தலைமையிலான மத்திய அரசும் பின்னர் ஆட்சிக்கு வந்த பாஜக தலைமையிலான அரசும் அடுத்தடுத்து தீவிரமாக அமல்படுத்தின. மத்தியில் மட்டுமல்ல பெரும்பாலான மாநில அரசுகளும் இதே கொள்கையை பின்பற்றி வருகின்றன. இடதுசாரிக் கட்சிகள் ஆண்ட மற்றும் ஆளுகிற அரசுகள் மட்டுமேஇந்த கொள்கைளுக்கு எதிராகக் கொள்கை ரீதியாகவும் நடைமுறை ரீதியாக வும் போராடி வருகின்றன. இந்த தாராளமயம், தனி யார்மயம், உலகமயம் ஆகியவை இந்திய நாட்டு மக்களின் வாழ்வில் எத்தகைய விளைவுகளை ஏற்படுத்தியுள்ளன என்பதை அலசி ஆராய்வதற்கு இதுவே சரியான தருணம். எல்பிஜி என்று சுருக்கமாக அழைக்கப்படும் இந்தக் கொள்கைகள் கட்டுப் பாடுகளைத் தளர்த்துதல் என்ற பெயரில் தனியார் மற்றும் அந்நிய முதலீடுகள் தங்கு தடையின்றி இந்தியாவுக்குள் நுழைய அனுமதித்தன. அடுத்த படியாக மிகப்பெரிய பணிகளைசெய்துவந்த அரசுத் துறைகள் அந்தப் பணிகளில் இருந்து விடுவிக்கப் பட்டு தனியாரிடம் ஒப்படைக்கப்பட்டன. இதனால் அந்தநிறுவனங்களில் பணிபுரிந்து வந்த தொழி லாளர்களின் உரிமைகள் பறிபோயின. கல்வி, சுகாதாரம், அடிப்படை கட்டமைப்பு, போக்குவரத்து உள்ளிட்ட மக்களுக்குச் சேவையாற்றி வந்த பொதுத் துறை நிறுவனங்கள் அனைத்தும் லாபமீட்டும் நிறுவனங்களாக மாற்றப்பட்டன. இதனால் ஏழை, ஏளிய மக்களுக்குக் கல்வி, சுகாதாரம் போன்ற சேவைகள் எட்டாக் கனியாக மாறிவிட்டன. காசு உள்ளவர்களுக்கு மட்டுமே இந்தச் சேவைகள் என்ற மிக மோசமான நிலை உருவாக்கப்பட்டுள்ளது.உலக வர்த்தக அமைப்போடு செய்து கொண்ட ஒப்பந்தப் படி வெளிநாடுகளில் இருந்துதாராளமாக பொருட்கள் இந்தியாவிற்கு அனுமதிக்கப்படுகின்றன.

அந்தப் பொருட்கள் மீதான இறக்குமதி வரியும் கணிசமாக குறைக்கப்பட்டுள்ளது. இதனால் உள் நாட்டில் உள்ள அதே தொழில்கள் கடும் நெருக் கடிக்கு ஆளாகி நசிந்து வருகின்றன. சில நிறுவனங்கள் வெளிநாட்டு நிறுவனங்களோடு போட்டி போடமுடியாமல் அழிந்துவிட்டன. வெளிநாடுகளில் இருந்து வரும் நிதி மூலதனம் இந்தியாவில் போதிய வேலை வாய்ப்புகளை உருவாக்கவில்லை. மேலும் அந்த மூலதனம் எந்த நேரத்திலும் வெளிநாட்டிற்குத் திரும்ப செல்லும் நிலையில்தான் உள்ளது. இதனால் நமது பொருளாதாரம் எந்த நேரத்திலும் மிகப்பெரிய நெருக்கடியைச் சந்திக்கும் நிலையில் உள்ளது. வெளிநாட்டில் இருந்து வரும் நிதி மூலதனம், அரசுத் துறையில் செலவினங்களை குறைக்கவேண்டும் என்றும் அரசின் கட்டுப்பாடுகள் குறைவாக இருக்க வேண்டும் என்றும் நிபந்தனைகளை விதிக்கிறது. தங்களது மூலதனத்தால் ஈட்டப்படும் லாபத்தின்மீது வரி விதிக்கக்கூடாது என்று எந்த நேரத்திலும் முதலீடுகளைத் திரும்பப் பெற்றுக்கொள்ளவும் சுதந்திரமாகச் செயல்படவும் அனுமதிக்கவேண்டும் என்றும் அவை நிர்ப்பந்திக்கின்றன. இந்தக் கொள் கைகள் 1991ஆம் ஆண்டு முதல் பின்பற்றப்பட்டு வருவதால் நலத்திட்டங்களுக்கான அரசின் நிதி குறைந்து அது சமூகத்தில் கடுமையான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது.

## பொருளாதார வளர்ச்சி

அந்நிய மூலதனம் நமது நாட்டின் பொரு ளாதார வளர்ச்சிக்கும் உதவவில்லை. 1980ஆம் ஆண்டுகளில் நாட்டின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதம் 6 விழுக்காடாக இருந்தது. 2008-09ஆம் ஆண்டு இது 8.4 விழுக்காடு வரை உயர்ந்தது. ஆனால் பெரு நிறுவனங்களுக்கு மிகப்பெரிய அளவில் வரிச் சலுகைகள் அளிக்கப்பட்ட பின்னர் இது 2011-12ல் 6.2 விழுக்காடாகச் சரிந்துவிட்டது. 2013-14 ஆம் ஆண்டுஇது மேலும் சரிந்து வெறும் 5 விழுக்காடாகக் குறைந்துவிட்டது.

## ஏழைகள் மீது வரி விதிப்பு அதிகரிப்பு

பொருளாதார சீர்திருத்தம் போதுமான வேலை வாய்ப்பை உருவாக்கத் தவறியதோடு இருக்கும் வேலையையும் பாதுகாக்கத் தவறிவிட்டது. பாஜக அரசின் பணமதிப்பிழப்பு நடவடிக்கை மற்றும் சரக்கு மற்றும் சேவை வரிஅறிமுகத்தால் கடந்த 2 ஆண்டுகளில் கூடுதலாக ஒரு வேலை வாய்ப்புக் கூட ஏற்படவில்லை. பாஜக அரசு பாதுகாப்புத் துறையைக் கூட விட்டுவைக்கவில்லை. அனைத்துப் பொதுத் துறை நிறுவனங்களையும் தனியாருக்கு விற்றுவருகிறது. இருக்கும் பொதுத்துறை நிறு வனங்களில் வெளிநாட்டு முதலீடுகளை அனு மதிக்கிறது. ஒருபுறம் செல்வந்தர்கள் மீதான சொத்து வரியை ஒழிக்கும் அரசு, மறுபுறம் மறைமுக வரி என்ற பெயரில் ஏழை, எளிய, நடுத்தர மக்கள் மீது ஏராளமான வரிகளை விதித்துவருகிறது. சர்வதேச சந்தையில் கச்சா எண்ணை விலை கணிசமாக சரிவைச் சந்தித்தபோதிலும் கலால் வரியை அதிகரித்து அதன் பலன் மக்களுக்குக் கிடைக்காமல் செய்துவிட்டது. மோசமான பொருளாதார கொள்கைகளால் தலித் மற்றும் பழங்குடியினர், பெண்கள் ஆகியோர் மீதான தாக்குதல்களை அதிகரிக்கச் செய்துள்ளது. நில உச்சவரம்பு சட்டங்கள் நீக்கப்பட்டு, நிலக்குவியல்கள் உருவாக்கப் படுகின்றன. கடந்த நான்காண்டு கால பாஜகஅரசில் ஏழைகள், பணக்காரர்கள் இடை யிலான சமத்துவமின்மை மிகவேகமாக அதிகரித்துவருகிறது.




மாநாட்டு ஊர்வலத்தில் பங்கேற்ற செந்தொண்டர்கள்






மாநாட்டு ஊர்வலம்




AISGEF மாநாட்டு மலர் வெளியீட்டு விழா



பொது மாநாட்டில், மாநாட்டு வரவேற்புக் குழு செயலாளர் மு.அன்பரசு வரவேற்புரை



பொது மாநாட்டில், மாநாட்டு நிர்வாகக் குழு தலைவர் மு.சுப்பிரமணியன் தலைமையுரை

நாட்டின் 58 விழுக்காடு சொத்துக்கள் ஒரு சதவீத பேரிடம் உள்ளன. 2014-2017 ஆண்டுகளுக்கு இடையே பல லட்சம் கோடிரூபாய் வைத்துள்ள பணக்காரர்கள் எண்ணிக்கை109ல் இருந்து 136 ஆக உயர்ந்துள்ளது. கடந்த ஓராண்டில் மட்டும் உலகில் பணக்காரர்களாக உள்ளவர்களின் எண்ணிக்கையில் இந்தியர்களின் விகிதம் 25 விழுக்காடு அதிகரித் துள்ளது. இவ்வாறு அவர் பேசினார்

## கல்வி,சுகாதாரம் தனியார்மயமாகி வருவதால் பெண்களுக்கு பெரும் பாதிப்பு:

### பேரா.சந்திரா



தலித் மற்றும் பழங்குடியின பெண்களுக்கு கல்வி மறுக்கப் படுகிறது என்றும் கல்வியும் சுகாதாரமும் தனியார்மய மானால் பெண்கள் பெருமளவில் பாதிக்கப்படுவார்கள். கடந்த 2014 மே மாதம் மகாராஷ்டிரா தேர்தல் பிரச்சாரத்தில் உங்கள் பிரச்சனைகள் யாவும் என் பிரச்சனைகள் போன்றது, விவசாயிகள் நிம்மதியாக தூங்கவில்லை எனில் நான் தூங்கமாட்டேன் என்று மோடி பிரச்சாரம் செய்தார். ஆனால் தற்போது என்ன நடந்துகொண்டு இருக்கிறது என்பதை நாடறியும். பாஜக ஆட்சிக்கு வந்தால் விவசாய விளைபொருட் களுக்கு சுவாமிநாதன் கமிட்டி பரிந்துரைத்த விலை நிர்ணயம் செய்யப்படும் எனக் கூறினார்கள். ஆனால் அப்படி எந்த விலை நிர்ணயமும் செய்யவில்லை. கடன் தொல்லையால் விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டால், அதை காதல் தோல்வியால் தற்கொலை செய்து கொண்டார்கள் என அமைச்சர்கள் ஏளனம் செய்கிறார்கள்.

பெண் குழந்தைகளை பாதுகாப்போம் என மோடி கூறுகிறார். 2011ஆம் ஆண்டு புள்ளிவிவரப்படி பெண்குழந்தைகளின் பிறப்பு விகிதம் கணிசமாக குறைந்துள்ளது. இதில் ஆட்சியாளர்களின் பங்கு என்ன என வினா எழுப்பினார். பாபாராம்தேவ் என்ற கோட்டீஸ்வர துறவி, இந்த மருந்தை கர்ப்பிணிப் பெண்கள் சாப்பிட்டால் ஆண் குழந்தை பிறக்கும் எனக் கூறி வியாபாரம் செய்து வருகிறார். இந்தவர்த்தகத்தில் பதஞ்சலி நிறுவனத்திற்கு 400 மடங்குவிற்பனை அதிகரித்துள்ளது. குழந்தை ஆணா பெண்ணா என பாலினம் பற்றிக் கூறினால் சட்டப்படிகுற்றமாகும். இதில் பல மருத்துவர்கள் தண்டிக்கப்பட்டுள்ளனர். பிரதமருக்கு நெருக்கமான பாபாராம் தேவ் மீது மட்டும் பாஜக அரசு எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லையே ஏன்? ராஜஸ்தான், ஹரியானா, உத்தரப்பிரதேசம் ஆகிய மாநிலங்கள் பெண் குழந்தைகளை வெறுக்கும் சமூகமாக மாறி வருகிறது. ஆனால் கேரளா, மிசோராமில் ஆண் குழந்தைகளை விட பெண் குழந்தைகளின் பிறப்பு விகிதம் அதிகரித்துள்ளது. பாஜக ஆளும் மாநிலங்களில் குழந்தைத் திருமணங்கள் ஊக்குவிக்கப்படுகின்றன.

அறிவுசார் வேலைகளில் பணிபுரியும் பெண் ஊழியர்களுக்கு சங்கம் அமைப்பது சவாலாக இருக்கிறது.பெண்கள் ஜீன்ஸ் பேண்ட் அணிந்தால் ஆண்களாகவோ அல்லது 3ஆம்பாலினத்தராகவோ மாறுங்கள் என கேரள ஆர்.எஸ்.எஸ். தலைவர் கூறுகிறார். இதற்கெதிரான போராட்டங்களை நாம் முன்னெடுக்க வேண்டியது அவசியமாகும். உழைக்கும் பெண்களை அணிதிரட்டுவதில் அரசு ஊழியர்கள் மேலும் தீவிரமாக செயலாற்ற வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்

## “ஒப்பந்தத் தொழிலாளர் சட்டத்தை எதிர்த்துப் போராட முன்வாருங்கள்”

### - நீதிபதி அரிபரந்தாமன்



புதிய ஓய்வூதியச் சட்டத்தை எதிர்ப்பதற்கு ஈடாக, ஒப்பந்தத் தொழிலாளர் சட்டத்தையும் எதிர்த்து வலு வான போராட்டம் தொடர்ச்சி யாக நடத்தப் பட்டாக வேண்டும். ‘‘சாதி எதிர்ப்பு, வர்க்கப் போராட்டம் இரண்டையும் இணைத்து ஒன்றாக நடத்தியாக வேண்டிய காலகட்டம் இது’’ என்றார். கேரளத்தில் அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராவதற்கான சட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. தமிழகத்தில் அது நடக்குமா? இழிசாதியினர் என்று ஒதுக்கப்பட்ட வர்கள் ஆலயங்களுக்குள் நுழையத் தடை விதித் திருந்தது இந்துத்துவா சித்தாந்தம். அந்தத் தடையை உடைக்க 1933ஆம் ஆண்டிலேயே போராட்டம் கண்டது கேரளம். தமிழகத்தில் அந்தப் போராட் டம் 1939ல் நடைபெற்றது. 1924ல் பொது வீதிகளில் தாழ்த்தப்பட்டவர்களும் நடமாடுவதற்கான போராட்டம் நடைபெற்று அந்த உரிமை நிலைநாட்டப்பட்டது. மத்திய மாநில அரசுகளின் அநீதிகளைத் தட்டிக்கேட்கும் வலிமை அனைத்து ஊழியர்களையும் சங்க வேறுபாடின்றி, சாதி-மத வேறுபாடின்றி ஒன்று சேர்க்கிறபோதுதான் உருவாகும். எதற்கெடுத்தாலும் நீதிமன்றங்களை நம்பிக்கொண்டிருக்க முடியாது. அப்படியொரு மயக்கம் இருந்திருக்குமானால் போக்குவரத்துத் தொழிலாளர் போராட்டத்தில் உயர்நீதிமன்றத்தின் தலையீடு அந்த மயக்கத்தைக் கலைத்துப் போட்டது. தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பாக இருந்த சமூகப்

பாதுகாப்பு ஓய்வூதியம் ஒழிக்கப்பட்டதற்குக் காரணம், உழைப்பாளி மக்களைத் தனியார் பக்கம் திருப்பி விடுவதற்காகத்தான். ஓய்வூதியத்திற்காகத்தானே அரசு வேலையை நாடுகிறாய், அது இல்லை என்றால் தனியார் துறைக்குத் தானே போக வேண்டும், தனியார் கெடுபிடிகளுக்கு உட்படத்தானே வேண்டும் என்ற அணுகுமுறை இதன் பின்னணியில் இருக்கிறது. தனியார் கல்வி நிறுவனங்களின் கட்டணக்கொள்ளைகளை நியாயப்படுத்த அரசுக் கல்விக் கட்டணங்கள் உயர்த்தப்படுவதன் பின்னணியில் இருப்பதும் இதே மனநிலைதான். தொழிலாளர்களையும் ஊழியர்களையும் வெளியேயிருந்து எடுத்துக் கொள்கிற அவுட்சோர்சிங் ஏற்பாடு எதற்கு? அவர்களுக்கு எந்தச் சட்டப் பாதுகாப்பும் கிடையாது என்பது மிகக்கொடூரம். பல் மருத்துவர் பணிக்குக் கூட அவுட்சோர்சிங்கில் நியமிக்கப்படுகிறார்கள். நிரந்தரத் தொழிலாளர்கள் போராடுகிற போது இந்த அவுட்சோர்சிங் தொழிலாளர்கள் வேலை செய்துகொண்டிருப்பார்கள். தொழிலாளர் போராட்டங்களில் ஏன் முன்போலத் தொழிலாளர்கள் பெருந் திரளாக இல்லை என்றால், 50 விழுக்காட்டிற்கு மேல் எங்கும் நிரந்தரமில்லாத, வேலை உத்தரவாதம் இல்லாத அவுட்சோர்சிங் தொழிலாளர்கள் நியமிக்கப்பட்டிருப்பதுதான். இதற்கு வழி செய்ததுதான் ஒப்பந்தத் தொழிலாளர் முறைப்படுத்தல் மற்றும் ஒழித்தல் சட்டம். அந்தச் சட்டம் ஒப் பந்தத் தொழிலாளர் முறையை ஒழிப்ப தற்கு பதிலாக, முறைப்படுத்துவது என்ற பெயரில் இப்படிப்பட்ட அவுட்சோர்சிங் நியமனங்களுக்கு வழிசெய்திருக்கிறது. ஆகவே, உழைப்பாளி மக்கள் புதிய ஓய்வூதியச் சட்டத்தை எதிர்ப்பதற்கு நிகராக இந்த ஒப்பந்தத் தொழிலாளர் சட்டத்தையும் எதிர்த்துப் போராட வேண்டும் என்றார் நீதிபதி

## இடஒதுக்கீட்டு உரிமையை நிலைநிறுத்த பொதுத்துறையை பாதுகாப்பது அவசியம்

### – டி.கே. ரங்கராஜன் உரை



சமுதாயத்தில் பின்னுக்குத் தள்ளப்பட்ட அனைத்து சமூகத்தினருக்கும் வேலைவாய்ப்பு, வாழ்நிலை முன்னேற்றம் இரண்டையும் உறுதிப்படுத்தவே இடஒதுக்கீடு கொள்கை கொண்டுவரப்பட்டது. அந்தக் கொள்கையைப் பாதுகாக்க வேண்டுமானால் பொதுத்துறை நிறுவனங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். “பொதுத்துறை நிறுவனங்கள் வந்ததால் தான் பின்தங்கிய மாவட்டங்களில் தொழில் வளர்ச்சியும், வேலை வாய்ப்புகளும் ஏற்பட்டன. இன்று பொதுத் துறை நிறுவனங்களை அழிக்க நடக்கும் சதிகளை உழைக்கும் மக்கள் முறியடித்தாக வேண்டும்” என்றார்.

கேரளத்தில் ஆட்சி செய்து வரும் இடது ஜனநாயக முன்னணி அரசு, தலித்துகளை அர்ச்சக ராக்கியதோடு மீனவர்களுக்கு பாதுகாப்பு கொடுத்துள்ளது. அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு பல்வேறு நலத் திட்டங்களை செயல்படுத்துகிறது. கர்நாடக அரசு ஊழியர்கள் சங்கம் தமிழகத்திற்கு தண்ணீர் தர வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. தமிழ்நாடு சிறந்த அறிஞர்களை, கல்வியாளர்களை உருவாக்கிய மாநிலம். 3 பேர் சிபாரிசு செய்த பிறகும் கூட வெளிமாநிலத்தவரை நியமனம் செய்தது தவறானது. தமிழ்நாட்டை யார் ஆட்சி செய்கிறார்கள் முதல்வரா அல்லது ஆளுநரா என தெரியவில்லை.

கேரளத்தில் மனிதக் கழிவுகளை அப்புறப்படுத்தும் வேலையை ரோபோ எந்திரம் செய்கிறது. தமிழக அரசு ஏன் இங்கேயும் அப்படிப்பட்ட நடவடிக்கைகளை எடுக்கக்கூடாது என்று கேட்டார் அவர். பல்கலைக் கழகத் துணைவேந்தர்கள், பேராசிரியர்கள் பணம் கொடுத்துதான் அந்தப் பதவிகளுக்கு வந்தார்கள் என்று கூறப்படுகிறது. அப்படிப்பட்ட நிலையில் கல்வியின் தரம் எப்படி இருக்கும்? 1980ம் ஆண்டுகளில், எம்ஜிஆர் ஆட்சியின் போது காவல் துறையினர் வேலைநிறுத்தம் செய்தார்கள். அவர்களுக்குத் துண்டறிக்கைகள் எழுதிக் கொடுத்ததே சிஐடியு சங்கம்தான். போராடும் தொழிலாளர்களைக் காவல் துறையினர் அடிக் கிறார்கள். அன்றைக்கு அவர்கள் போராடியபோது ரிசர்வ் போலீஸ் படையினர் அடித்தார்கள். போராடுகிற தொழிலாளர்களை மனிதர்களாக மதிக்கிற பண்பாட்டைக் காவல் துறையினர் வளர்த்துக் கொள்ள வேண்டும். இன்று இளைஞர்களின் வறுமையைப் பயன்படுத்திக் கொண்டு அவர்களை அவுட்சோர்சிங் தொழிலாளர்களை வேலைக்கு எடுக்கும் நடைமுறை எங்கும் பரவி யிருக்கிறது. அந்த இளைஞர்களுக்காகவும்தான் சிஐடியு போராடுகிறது. மத்தியில் இருப்பது சாதாரணக் கட்சியின் ஆட்சி அல்ல. மதவாத அரசியலின் உச்சத்தில் இருக்கிற கட்சிதான். பிறப்பால் மனிதர்களைப் பாகுபடுத்துவது வர்ணாசிரம சித்தாந்தம். அந்த சித்தாந்தத்திற்கானவர்கள் மத்திய ஆட்சியில் இருக்கிறார்கள். ஆனால் பொதுமக்களிடம் நாடகம் நடத்துகிறார்கள். கடவுளை நம்புவதும் வணங்கு வதும் மதத்தைப் பின்பற்றுவதும் அவரவர் சொந்த விருப்பம். ஆனால் ஒரு அரசு எந்த மதமும் சாராத தாக இருக்க வேண்டும் என்பதே மதச்சார்பின்மை. இந்தச் செய்தி மக்களிடையே கொண்டுசெல்லப்பட வேண்டும். அரசு ஊழியர்கள் மக்களிடையே வலுவாகவும் பரவலாகவும் கொண்டு செல்ல முடியும். ❖



பொது மாநாட்டில் நீதியரசர் ஹரிபரந்தாமன் அவர்களின் சிறப்புரை




பொது மாநாட்டில் நாடாளுமன்ற உறுப்பினரும், வரவேற்புக் குழுத் தலைவருமான டி.கே.ரங்கராஜன் அவர்களின் எழுச்சியுரை




பொது மாநாட்டில் உரையாற்றும் AISGEF பொதுச் செயலாளர் ஸ்ரீகுமார்




பொது மாநாட்டில் AISGEF வரவேற்பு நிர்வாகக் குழு உறுப்பினர்
மொ.ஞானத்தம்பி நன்றியுரை

# உழைப்பாளி மக்கள் முறியடிக்க வேண்டிய மூன்று எதிரிகள்
# கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் எழுச்சியுரை

சாதியம், மதவெறி, கார்ப்பரேட்மயம் ஆகிய மூன்று முக்கிய எதிரிகளையும் முறியடிக்க இந்திய உழைப்பாளி மக்கள் வலுவாக ஒன்றுபட்டு எழ வேண்டும் என்று கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் அறைகூவல் விடுத்தார். பொது மாநாட்டில் சிறப்புரையாற்றிய பினராயி விஜயன், “மக்களிட மிருந்து திரட்டிக் குவிக்கப்படும் பெரும் நிதி மக்கள் நலன்களுக்காக அல்லாமல் கார்ப்பரேட் ஆதாயங் களுக்காகவே மடைமாற்றம் செய்யப்படுகிறது. அதிலிருந்து மக்கள் கவனத்தைத் திசைதிருப்ப மதவாத சர்ச்சைகளும் சாதி விவகாரங்களும் கிளப்பப்படுகின்றன” என்றார். அவரது உரையின் சுருக்கம் வருமாறு:

முந்தைய காங்கிரஸ் தலைமையிலான ஐமுகூ அரசு கொண்டுவந்த பொருளாதாரக் கொள்கைகளைத் தான் இன்றைய பாஜக கூட்டணி அரசுமிகத் தீவிரமாகச் செயல்படுத்துகிறது. அதுஎளிய மக்களின் வாழ்வாதாரங்களைச் சூறையாடுகிறது. புதிய ஓய்வூதியத் திட்டத்தை உருவாக்குவதற்கான ஆணையம் அமைக்கப்பட்டபோது, அனைத்துத் தற்காலிக வேலைகளும் வெளிப்பணி (அவுட் சோர்சிங்) வேலைகளும் நிரந்தரமாக்கப்பட்டு நிரந்தர ஊழியர்களுக்கான ஊதிய விகிதங்கள் வழங்கப்பட வேண்டும், தொழிலாளர் சட்டங்கள் கறாராகச் செயல்படுத்தப்பட வேண்டும் என்று தொழிற் சங்கங்கள் வலியுறுத்தின. அவற்றில் எதையுமே ஆணையம் ஏற்கவில்லை. உலகவங்கியும் பன்னாட்டு நிதியமும் கட்டளையிட்டபடிக் கொண்டு வரப்பட்ட இப்படிப்பட்ட நடவடிக்கைகளால் தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரம் தொடர்ந்து வீழ்ச்சியடைந்து வருகிறது. மிக மலிவாக உழைப்புச் சுரண்டல் நடைபெறுகிறது. தொழிலாளர் உரிமை களும் தொழிற்சங்க உரிமைகளும் தொடர்ந்து பறிக்கப்படுகின்றன.

வேலையளிப்பதில் அரசு ஒரு முன்னுதாரண அமைப்பாக இருக்க வேண்டும். ஆனால் மத்திய அரசிலும் பல்வேறு மாநில அரசுகளிலும் லட்சக் கணக்கான பணியிடங்கள் காலியாக விடப்பட் டுள்ளன. நாட்டின் அரசமைப்பு சாசனம் சம உரிமையை உறுதிப்படுத்துகிறது. ஆனால் எங்கும் ஒப்பந்தத் தொழிலாளர்கள் நியமிக்கப்பட்டு, அவர்களுக்கான பாதுகாப்புகள் மறுக்கப்படுகின்றன. அதன்மூலம், ஒரே வேலையைச் செய்கிற தொழிலாளர்களது சம உரிமை மறுக்கப்படுகிறது. இது அரசமைப்பு சாசனத்தையே மீறுகிற செயல். தொழிலாளர்களது ஊதியப் பேச்சுவார்த்தை உரிமை, வேலைநிறுத்த உரிமை ஆகியவற்றைச் சட்டப் பூர்வமாக அங்கீகரிக்க வேண்டும் என்பது, இந்தியாவும் அங்கத்தினராக உள்ள பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பின் (ஐஎல்ஓ) தீர்மானம். ஆனால், ஐஎல்ஓ அமைப்பை நிறுவிய ஒரு அங்கத்தினராக இருந்தபோதிலும் இந்திய அரசு இதுவரையில் இந்தப் பரிந்துரைகளை அங்கீகரிக்க வில்லை. புதிய ஓய்வூதியத் திட்டம் உண்மையில் பெருமுதலாளிகளின் ஊகச்சந்தை சூதாட்டத்துக்காக ஊழியர்கள், தொழிலாளர்கள் ஆகியோரின் நிதியைத் திருப்பிவிடுகிற ஏற்பாடுதான். வரிச்சலுகை, வரி பாக்கி தள்ளுபடி, வராக்கடன் தள்ளுபடி என்றும் கார்ப்பரேட்டுகளுக்கு வாரி வழங்கப்படுகிறது. நாடாளுமன்றத்தில் பட்ஜெட் விவாதமின்றி நிறைவேற்றப்படுகிறது.

விவசாய இடுபொருள்களுக்கான மானியங்கள் வெட்டு, விளைபொருள்களுக்கு உரிய கொள்முதல் விலைநிர்ணயிக்கப்படாதது உள்ளிட்ட காரணங் களால் 30 விழுக்காடு வரையில் கூட வட்டிக்குக் கடன் வாங்கிசாகுபடியில் ஈடுபட்ட விவசாயிகள் மிகக் கடுமையான நெருக்கடியில் சிக்கியிருக் கிறார்கள். அதுதான் அவர்களைத் தற்கொலைக்குத் தள்ளுகிறது. வேலைவாய்ப்பில் வளர்ச்சியில்லாத பொருளாதார வளர்ச்சியால், நிரந்தர வேலை என்பதேஒரு மாயையாகியிருக்கிறது. வேலைகளை இழப்போருக்கு இனி சட்டம் பாதுகாப்பாக இருக்காது. பணமதிப்பு ஒழிப்பு நடவடிக்கையும், ஜிஎஸ்டி வரிவிதிப்பும் நமது பொருளாதாரத்தை மேலும் சீர்குலைத்துள்ளன. இப்படிப்பட்ட நிலைமைகளால் சமுதாயத்தில் பாதிக்கப்பட்டிருக்கிற அனைத்துத் தரப்பினரிடையேயும் ஒரு அமைதி யின்மை பரவியிருக்கிறது. போராட்டங்களாக அது வெளிப்படுகிறது. விவசாயிகள், தொழிலாளிகள், இளைஞர்கள், மாணவர்கள், மருத்துவர்கள் என பல்வேறு தரப்பினரும் தெருவில் இறங்கி போராடத் தொடங்கியிருக்கிறார்கள். மோடி அரசின் ஒரே சாதனை விளம்பர ஏற்பாடுகள் மட்டுமே. ஸ்டார்ட் அப் இந்தியா என்றார்கள், ஸ்டேண்ட் அப் இந்தியா என்றார்கள். ஆனால் எவ்வித அடித்தளமும் ஏற்படுத்தப்படாமல் வெறும் விளம்பர ஏற்பாடு களால் மட்டுமே தனது சாதனைகள் என்று சொல்லிக்கொள்ளும் நிலைமை. கேரளத்தில் மக்களை பாதிப்புகளிலிருந்து காப்பதற்காக சில திட்டவட்டமான நடவடிக்கைகள்

எடுக்கப்பட்டுள்ளன. உறுதியான தொடர்ச்சியான வளர்ச்சிக்கு வழிசெய்யப்பட்டிருக்கிறது.

நாட்டில் வேறெங்குமே முன்னுதாரணம் இல்லாத வகையில், சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. வீட்டு வசதி, பொது சுகாதாரம் ஆகியவற்றை அனைவருக்கும் உறுதிப்படுத்தும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. எல்லாவற்றும் மேலாக மதவெறி சக்திகளின் தாண்டவம் கேரளத்தில் தடுத்து நிறுத்தப்பட்டிருக்கிறது. மக்களின் கடும் அதிருப்திக்கு பாஜக உள்ளாகியுள்ள நிலையில் அதன் கூட்டாளிகள் விலகிக் கொண்டிருக்கிறார்கள்.

இன்னொரு பக்கத்தில் மதவெறியை எதிர்ப்பதில் காங்கிரஸ் தலைமை கடைப்பிடித்த மென்மையான அணுகுமுறையின் காரணமாக, பல காங்கிரஸ் தலைவர்கள் பாஜக-வுக்குத் தாவுகிறார்கள். தொழிற்சங்க இயக்கங்கள் தொழிலாளர்களுக்கான கோரிக்கைகளோடு, இந்தச் செய்திகளையும் மக்களிடையே கொண்டுசெல்ல வேண்டும், லாப வெறி கார்ப்பரேட் சந்தையின் பிடியிலிருந்தும் மதவெறி சக்திகளிடமிருந்தும் சாதியவாதிகளிடமிருந்தும் மக்களை மீட்டு, சமத்துவ லட்சியங்களை நோக்கிய உறுதிமிக்கப் போராட்டங்களுக்கு மக்களை அணி திரட்டுவதிலும் ஈடுபட வேண்டும். இவ்வாறு பினராயி விஜயன் எழுச்சிமிகு உரையாற்றினார்.

அவரது ஆங்கில உரையின் தமிழாக்கத்தை மூத்த பத்திரிகையாளர் அ.குமரேசன் வழங்கினார். ❖

# வேர்களும் - விழுதுகளும்

அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் 16வது தேசிய மாநாடு சென்னையில் 2018 ஏப்ரல் 5-8 தேதிகளில் நடைபெற்றது. ஆயிரக்ககணக்கான விழுதுகளுடன் உயர்ந்து, பறந்து, உறுதியாக நிற்கும் ஆலமரம்போல் வளர்ந்துள்ள தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் இந்த மாநாட்டை முன்னின்று மிகச் சிறப்பாக நடத்தியது.

இந்த சிறப்புமிக்க அகில இந்திய மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு ஆலமரத்தின் வேர்களான முன்னாள் மாநில நிர்வாகிகளை, சிறப்பு ஆலோசகர்களாக வரவேற்புக் குழுவில் இணைத்திருந்ததுடன், மாநாட்டிலும் கலந்து கொள்ள வேண்டும் என அழைப்பு விடுத்தது மிகவும் பெருமைக்குரிய விஷயமாகும்.

மாநாட்டின் நான் உட்பட முன்னாள் நிர்வாகிகளான என்.எல்.சீதரன், கே.ஆர்.சங்கரன், ஏ.ராமசாமி, ஆர்.ஜோதி, எஸ்.ஆறுமுகம், என்.ஞானகுரு, பி.வி.சந்திரசேகரன், கே.ராஜ்குமார், சு.சிவகுமார், ஆர்.தமிழ்செல்வி, என்.இளங்கோ, வி.தேவன், பா.ரவி, வி.கணபதி, கே.எம்.தியாகராஜன், பி.எஸ்.அப்பர், எஸ்.ஏ.வெற்றிராஜன் ஆகியோர் கலந்து கொண்டோம்.

வயதானர்கள், மூத்தவர்கள் என்ற முறையில் தங்க வைப்பதிலும் சரி, மாநாடு அரங்கில் அமர வைப்பதிலும் சரி, உணவு அருந்த உதவி செய்வதிலும் சரி, தற்போதைய மாநில நிர்வாகிகள் முதல் தொண்டர்கள் வரை திரும்பத் திரும்ப கவனித்துக் கொள்வதில் கவனமாக இருந்தது மகிழ்ச்சியாக இருந்தது.

முன்னாள் மாநில நிர்வாகிகள் சார்பாக அனைத்துத் துறை ஓய்வூதியர் சங்க மாநிலத் தலைவர் என்.எல்.சீதரன் மாநாட்டை வாழ்த்தி பேசினார்.

மாநாடு ஏற்பாடுகள் மிகச் சிறப்பாக அமைந்து இருந்தது. மறைந்த முன்னாள் தலைவர்கள் தோழர்கள் சுகுமால்சென், எம்.ஆர்.அப்பன், இரா.முத்துசுந்தரம் ஆகியோரின் நினைவு ஜோதிகளை தமிழ்நாட்டின் மூன்று முனைகளில் இருந்து கொண்டு வந்து, மாநாட்டில் தலைவர்கள் அதனை பெற்றுக் கொண்டது, முன்னெப்போதும் இல்லாத முதல் நிகழ்ச்சியாக அமைந்திருந்தது மகிழ்ச்சியை அளித்தது

பொதுச் செயலாளர் அறிக்கையினை தமிழில் மொழி மாற்றம் செய்து தமிழ்நாடு பிரதிநிதிகளுக்கு வழங்கியது நல்ல முடிவாகும்.

மாநாட்டு அரங்கில் கண்காட்சி அமைக்கப்பட்டிருந்தது. முதல் அகில இந்திய மாநாடு முதல் பதினைந்தாவது அகில இந்திய மாநாடு வரை நடைபெற்ற நிகழ்வுகள், தற்போதைய பொருளாதார சீர்கேடுகள், மத்திய அரசின் பிற்போக்குத்தனமான நிகழ்வுகளை மிக அழகாக சித்தரிக்கப்பட்டு இருந்தன.

கண்காட்சியில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க வரலாறு, போராட்டங்கள், அதன் வெற்றியும் படிப்பினைகளும் பற்றிய விவரங்கள் இடம் பெற்றிருந்தால் இன்னும் சிறப்பாக அமைந்திருக்கும்.

**- நெல்லை ஆறுமுகம்,**

முன்னாள் மாநில துணைத் தலைவர்







Printed and Published by M. ANBARASU on behalf of Tamil Nadu Government Employees Association, at No.48, New No.46, Car Street, Triplicane, Chennai 600005 and Printed at Chennai Offset Printers, 19/1 & 21/2, Kithabath Khan Bhagadur Street, Ellies Road, Anna Salai, Chennai 600002, Editor: M. SUBRAMANIAN . Phone: 28441286
E-mail: arasuoozhiyar@gmail.com